# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 25. தொலைபேசி: 2 3 4 1 1

வள்ளுவர் ஆண்டு 2003, மாசி 15வ. (27-2-72) ஞாயிறு 1391 முஹர்றம் 11 புத்தகம் 25 இதழ் 14


## குமாரசூரியர் தன்னைத்தான் சாடுகிறார்!

"தமிழ் மொழியை வாழ்க்கையில் புறக்கணித்து ஆங்கிலத்தைக் கைக்கொண்டு அதனால் பெருமிதமடைபவர்களே தமிழ் மொழிக்காக நீலிக் கண்ணீர் விடுகின்றனர்."

—அமைச்சர் குமாரசூரியர் (வீரகேசரி 18-2-72)

(நாடாளுமன்றத்தில்) குமாரசூரியரை சபாநாயகர் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். அவர் ஆங்கிலத்திலேயே பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

—தினபதி (18-2-72)

# தமிழரசுத் தலைமைப்பீடம் தயாராகிறது!

தமிழரசுக்கட்சியின் தலைமைப்பீடம் ஈழம் வாழ் தமிழ்பேசும் மக்களை விழிப்பாக இருக்குமாறு எச்சரிக்கை விடுத்துள்ளது. — — — — — — — — — — — — — — — — 'வடக்கிலும் கிழக்கிலும் உள்ள தமிழ் மக்களைக் கண்டு 'புதிய அரசியல் சட்டத்தை' விளக்குவதற்கு ஆன நடவடிக்கைகளைக்கிமேற்கொண்டுவருகிறது' என தளபதி அமிர்தலிங்கம் அவர்கள் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

'அமைதியான முறையில் நாங்கள் மக்களை அணுகி பிரச்சினையை விளக்கி வருகிறோம். — — — — — — — — — — — — — —

எங்கள் கருத்துக்கள் மக்களிடையே பரவவிடாதபடி எத்தனை தடைகள் விதிக்கப்படினும் அவை பயனற்றவையே. தமிழ் மக்களும் நாங்களும் இரண்டறக் கலந்திருக்கிறோம்.

தமிழரசுக்கட்சித் தலைவர்களை இந்த உலகத்தில் இருந்து வேண்டுமானால் — — — பிரித்தெடுத்து மறு உலகத்துக்கு அனுப்பலாம் — — — — — — — — தமிழ் மக்களிடமிருந்து எங்களை — — — எத்தனை சதி செய்தாலும் பிரித்தெடுக்க முடியாது. இந்த உண்மையை யாரும் மறந்துவிடக்கூடாது என்றும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

(இதில் கோடிட்டவையெல்லாம் தணிக்கை அதிகாரியால் தணிக்கை செய்யப்பட்டுள்ளது.)



## கருணாநிதி களத்து யானை! சூரியர் சுண்டெலி!

'நான் கருணாநிதியைப் போல் இருக்கிறேன்' என்று கூறியிருக்கிறார் குமாரசூரியர். தமிழரிடம் நல்ல பெயர் வாங்கவேண்டுமானால் யாரை உதாரணம் காட்டிப் பேசவேண்டும் என்பது இப்போதாவது குமார சூரியருக்கு தெரிய வந்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகிறோம்; 'இலங்கைக்கு என்று தனிக் கலாச்சாரம் உண்டு — எங்களுக்கு என்று தனி வழி உண்டு' என்று கூறும் குமாரசூரியர் தமிழ்நாட்டு கருணாநிதியை தனக்கு உவமையாகக் கூறலாமா? என்று டொமினிக் ஜீவா முணு முணுப்பதாகக் கேள்வி — அது ஒரு புறம் இருக்கட்டும் — இப்போது சூரியரிடம் சில கேள்விகள் கேட்போம்:

கல்லக்குடி என்ற ஊரின் பெயர் 'டால்மியாபுரம்' என வடநாட்டார் பெயராக மாறியதற்கு புகைவண்டியின் முன் படுத்து போர் செய்தாரே கருணாநிதி — — — — —

(தணிக்கை)

— — — வருகிறீர்களா — ஒரு புகைவண்டியின் முன் போய்ப் படுப்போம். தமிழ் நாட்டில் இந்தியைத் திணித்து உலாவந்த நேருவுக்கு கறுப்புக் கொடி காட்டி சிறை சென்றாரே கருணாநிதி—வருகிறீர்களா —

(தணிக்கை) 'பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவுக்கு கறுப்புக்கொடி காட்டிச் சிறை செல்வோம்! தமிழ் நாட்டில் விலைவாசி ஏற்றம் ஏற்பட்டபோது அதை எதிர்த்து — சிறையில் சோளம் கஞ்சி சாப்பிட்டாரே கருணாநிதி — — —

(தணிக்கை)

— — வருகிறீர்களா விலைவாசி எதிர்ப்புப் போர் செய்து எங்காவது ஒரு சிறையில் போய் சோளம் கஞ்சி

(4ம் பக்கம் பார்க்க)

## கள்ளிறக்கும் தொழிலாளர் பாதிக்கப்பட்டுள்ளனராம்!

### சுப்பிரமணியத்தின் தலைவர் ஒப்பாரி!

தவறணைகள் திறக்கப்படுவதால் யாழ்ப்பாணத்திலுள்ள 15,000 கள்ளிறக்கும் தொழிலாளர் வாழ்வு பாதிக்கப்படும். மரவரி முறையை இந்த அரசாங்கம் ரத்துச் செய்து — தவறணை முறையைக் கொண்டு வந்துள்ளதால் கள்ளிறக்கும் தொழிலாளர் பலரது வீடுகளில் வறுமை ஏற்படும். கூட்டுறவு முறையில் செய்தாலும் தவறணை முறையில் செய்தாலும் 15,000 தொழிலாளர் வாழ்வுக்கு ஊறுதகம் ஏற்பட்டே தீரும்.'

இவ்வாறு யாழ்நகரில் நடைபெற்ற கள்ளிறக்கும் தொழிலாளர் சங்கத்தின் 38வது மாநாட்டில் ஒப்பாரி வைத்துப் பேசி இருக்கிறார் கம்யூனிஸ்டு கட்சித் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்கா;

மரவரி ரத்தை ஆதரித்து பாராளுமன்றத்தில் கை தூக்கி இருக்கிறார் எம். சி. சுப்பிரமணியம். ஆனால் சுப்பிரமணியத்தின் தலைவரோ ஒப்பாரிவைக்கிறார்.

தோழர் விக்கிரமசிங்கா அவர்களே! இது உங்களுடைய தொழிலாளர் அரசாங்கம்! இது உங்களுடைய சோசலிச அரசாங்கம்! நீங்களும் பீட்டர்கெனமனும் வ. பொன்னம்பலமும் கம்புப்பிடித்துக் கொஞ்சி மகிழ்கின்ற கூட்டரசாங்கம்! உங்

(4ம் பக்கம் பார்க்க)

## சிமோல் அருளம்பலத்தின் சிமோல் ஐடியா!

யாழ்ப்பாணத்தில் வந்திறங்கிய ஜி. ஜி. பொன்னம்பலத்தை வரவேற்கப் போகாத மும்மூர்த்திகளில் ஒருவரான சிமோல் அருளம்பலம் ஒரு புதுக் கருத்தினை வெளியிட்டிருக்கிறார். "ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தலைமையில் தமிழரசார் பிரதமரைச் சந்தித்து புதிய [illegible] பேச்சுவார்த்தை [illegible] வேண்டும்" என்பதே அந்த மணியான கருத்தாகும். ஜி. ஜி. பொன்னம்பலத்தின் தமிழ்க்காங்கிரசைச் சேர்ந்த அருளம்பலமே ஜி. ஜி. யின் தலைமையை ஏற்கத் தயாராக இல்லை—ஓடிப்போய் கூட்டரசாங்கத்தில் ஒட்டிக் கொண்டிருக்கிறார். "தமிழரசாருக்கு ஜி. ஜி. தலைமை தாங்கவேண்டும்" என்று [illegible] இந்த சிமோலுக்கு என்ன தகுதி என்று கேட்கிறார்கள் மக்கள்;

## அடி வருடுவது ஆர்?

"இலங்கைத் தமிழரசுக்கட்சியினர் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள்" என்று தோழர் பீட்டர்கெனமன் அவர்களும் அவரின் தொண்டர் வ. பொன்னம்பலம் அவர்களும் நீண்ட நாட்களாகக் கூறிவருகிறார்கள்.

சமீபத்தில் அமெரிக்காவிடம் இலங்கை அரசாங்கம் 3.0 இலட்சம் டாலர் பெறுமதியான உபகரண உதவி பெற்றிருக்கிறது. அது மட்டும் அல்ல வியட்நாம் மக்களைக்கொலை செய்த அமெரிக்க கொலைகாரன் என ரஷ்யதோழர்களால் வர்ணிக்கப்பட்ட மக்னமராவை இந்த அரசாங்கம் வரவழைத்து உலக வங்கி கடன் பெற்றிருக்கிறது. அமெரிக்காவோடு கொஞ்சிக் குலவும் இந்த அரசாங்கத்தில் இரண்டறக் கலந்து—அதன் அங்கமாய் இன்று காட்சி தருகிறார்கள் கெனமனும் பொன்னம்பலமும்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் அடிவருடிகள் யாவர்? நீங்களா? நாங்களா?

—காசி ஆனந்தன்.

(கோண்டாவில் கூட்டத்தில் பேசியது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்திற்கு அப்பால்

# தமிழின் செல்வாக்கு

பல்கலைச் செல்வர். தெ. பொ. மீ.

பழைய மொழிகளில் தமிழும் ஒன்று: 'க்ளாசிக்கல்' என ஆங்கிலத்தில் வழங்கும் உயர்தனிச் செம்மொழிகளில், வடமொழி முதலியவை போலத் தமிழும் தனிச்சிறந்ததொன்று: ஆனால் அவற்றில் பல வழக்கற்றுப் போனதால், புதியன போல உலகத்தில் மொழிகள் பல தோன்றி வழங்குகின்றன. தமிழோ இன்னும் உயிரோடு நிலவிப், பேச்சு மொழியாக இன்றைய மொழிகள் கணக்கிலும் உயர்ந்து விளங்குகிறது. இன்றுள்ளவர்கள் சிறிது முயன்றால் பழந்தமிழை எளிதில் விளங்கிக் கொள்ளக்கூடும். 500 ஆண்டுகளுக்கு முந்திய சாசர் எழுதிய ஆங்கிலம் இன்று புரியாதிருக்கும் நிலையில் இஃது ஒரு பெரிய வியப்புத்தான்: இலக்கண வரம்பை பாதுகாத்துவந்திருப்பதோடு பெரும்பான்மையோர் கற்றவர்களாக இருந்ததன் பயன் இது. இப்புதிய மொழிகளிலும் பல ஒவ்வொரு தேசத்துக்கே உரியன. ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ருஷ்யன், அரபிக் முதலிய சிலவே பல தேசங்களில் வழங்கும் பல தேசமொழிகளாகத் தலைதூக்கியுள்ளன: இத்தகைய பல தேச மொழிகளிலும் தமிழ் ஒன்று:

தமிழகத்து மக்கள், பல நூற்றாண்டுகளாகவே தம் நாட்டைக் கடந்து மொழி பெயர் தேயத்தும் சென்று பொருள் தேடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர். தமிழரின் இலக்கியத்திலும் இதற்கு நெடுகச் சான்று உள்ளது: எனவே, இந்தியாவிலும் வெளிநாடுகளில் தொடர்பு பண்டைக் காலத்திலிருந்தே தொடங்கிவிட்டது. டில்லி, பம்பாய், அலகாபாத்து, அகமதாபாத்து, காசி, கல்கத்தா, கேரளம், ஆந்திரப்பிரதேசம், கருநாடு முதலிய பல இடங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர். தமிழ்ச் சங்கங்கள் வைத்துத் தமிழ் பண்பாட்டின் தூதுவராக விளங்கி வருகின்றனர். உழைப்பும் ஒழுங்கும் உடையவர்கள் எனப்பெயரும் பெற்றுள்ளனர்.

## இந்தியா எங்கும் தமிழ்

கேரளப் பல்கலைக்கழகம், உஸ்மானியப் பல்கலைக்கழகம், ஸ்ரீவெங்கடேஸ்வரப் பல்கலைக்கழகம், மைசூர் பல்கலைக்கழகம், பங்களூர் பல்கலைக்கழகம், கல்கத்தாப் பல்கலைக்கழகம், காசிப் பல்கலைக்கழகம், அலகாபாத்துப் பல்கலைக்கழகம், அக்ரா பல்கலைக்கழகம், லக்நோவ் பல்கலைக்கழகம், டில்லிப் பல்கலைக்கழகம், பஞ்சாப் பல்கலைக்கழகம், பட்டியாலப் பல்கலைக்கழகம் முதலியவற்றில் தமிழ்த்துறைகள் உண்டு. விசுவபாரதியிலும் ஏற்பாடு செய்ய இடமுண்டு. இங்கே பல இடங்களில் தமிழ்துறை அமைக்க தமிழ் நாட்டு அரசாங்கம் உதவி உள்ளது பம்பாய், உதகல் முதலிய இடங்களிலும் விரும்பித் தெரிவித்தால் தமிழ்த் தேர்வு எழுத வசதிகள் செய்து தர முடியும். தமிழ்ப் பேராசிரியர்கள் ஆங்காங்கே தொண்டாற்றி வருகிறார்கள். இந்தி

சிரியர் மன்றம் ஒன்று தோன்றி ஆண்டு தோறும் பல்கலைக்கழகங்களின் துணையோடும் பல்கலைக்கழகமானியக் குழுவின் உதவியோடும் கருத்தரங்கு நடத்தி வருகிறது. தமிழ்ச் சைவசித்தாந்தத்தைக் கற்பிக்கத் திருப்பனந்தாள் மடம் காசிப் பல்கலைக்கழகத்தில் ஏற்பாடு செய்துள்ளது. ஆண்டுதோறும் ஒரு சொற்பொழிவாளர் அலகாபாத்தில் ஒன்றும் [illegible]யில் இரண்டுமாக சைவசித்தாந்தம் பற்றி ஆராய்ச்சி விரிவுரை வழங்க அண்ணாமலைப் பல்கலைகழகம் ஏற்பாடு செய்துள்ளது:

இந்திய வரலாற்றிலும் இந்தியப் பண்பாட்டு ஆராய்ச்சியிலும் தமிழ் நாட்டு வரலாறும் தமிழ்ப் பண்பாடும் அடங்கி இருப்பதால் எங்கும் இவற்றை கற்று வருகின்றனர். மொழி இயல் ஆராய்ச்சி பரவி வருவதன் காரணமாகத் தமிழ் உள்ளடங்கிய திராவிடமொழி இனத்தைப்பற்றி இப்பொழுது அறிவு எங்கும் பரவி வருகிறது. மொஹஞ்சதாரோவில் பேசப்பட்டு வந்ததாக ஐயப்படுகிற திராவிட மொழிகளில் பழமையான வடிவத்தில் பண்டைய இலக்கிய வளத்தோடும் செழித்திருப்பது தமிழே: ஆகையால் தமிழைப் பலரும் ஆராய முற்பட்டிருக்கின்றனர்.

மணவாள மாமுனிவர் காலத்திலிருந்து தமிழ் நாட்டு ஆழ்வார்களின் பாடல்கள் இந்தியா முழுவதும் வைணவத்தோடு பரவின: தென்கலை வைணவர்கள் வேறு எந்த மொழி பேசினாலும் அந்த மொழியின் எழுத்திலேயே திருப்பாவை முதலியவற்றை எழுதி பாராயணம் செய்யும் வழக்கத்தை இன்றும் காணலாம். அண்மையில் கல்கத்தாவிற்கருகில் மருத்துவர் ஒருவர் துறவுபெற்று, காஞ்சிபுரத்து தென்கலை வைணவர்களைக் கொண்டு கோவில் கட்டிவிழா முதலிய நடத்துவதோடு, நம்மாழ்வாரின் பாடல்களை வங்கமொழியில் அப்படியே எழுதியும் வங்கத்தில் மொழி பெயர்த்துப் விரிவுரை எழுதியும் பதிப்பித்துள்ளார்.

தமிழ் நாட்டு சைவர்கள் பாராட்டும் திருத்தொண்டர்த் தொகையில் வரும் அடியார்களைப்பற்றியே சேக்கிழார் பெரியபுராணம் பாடியிருக்கிறார் அல்லவா? இந்த அறுபத்து மூவர்களைப் பற்றி "புராதன புருவிர்கள்" என்று வீரசைவர்கள் கன்னட நாட்டிலும் தெலுங்கு நாட்டிலும் பாராட்டிப் புராணங்களும், நாடகங்களும், தனித்தனிக் கதைகளுமாகப் பல நூல்கள் பாட்டாகவும் உரைநடையாகவும் எழுதி உள்ளார்கள்.

(தமிழ்ச்செல்வாக்கு [illegible] பரவி இருப்பதனை [illegible] சென்ற ஆண்டு கூடிய உலகத் தமிழ் கருத்தரங்கு மா[illegible] எழுத முயன்றேன்: ஆதலின் ஈண்டு அதனை விரித்துரைக்க வேண்டுவதில்லை.)

## பரவிய தமிழர்கள்

மிகப் பழங்காலமாகத் தமிழர் பிறநாடுகளோடு உறவும் தொடர்பும் கொண்டவர்கள். அரசியல் வற்புறுத்தலும், அரசு காண்டலும், படை எடுப்பும், கீழைக் கடலிலும் இலங்கையிலும் தமிழர் செய்தது உண்டு என்றாலும் பெரும்பான்மையும் இவர்கள் பண்பாட்டையும், வணிகத்தையும் பரப்பி வளர்ப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து வந்துள்ளார்கள்.

'திரை கடலோடியும் திரவியம் தேடு' என்பது தமிழ்க் குழந்தைகள் கற்கும் கொன்றைவேந்தனில் வருவது. பிழைப்பதற்காக பிற நாடுகளுக்கு சென்று, சில நாடுகளில் தேயிலைத்தோட்டங்களையும் ரப்பர் தோட்டங்களையும் வளர்த்து அந்த நாடுகளின் செல்வத்தை ஓங்கச் செய்தார்கள்: வளர்த்துக்கொண்டும் இருக்கிறார்கள். ஆனால் அந்தந்த நாட்டிலேயே உள்ளவர்களுக்கு வேலைவாய்ப்பு வேண்டி இவர்களை வெறுக்கும் நிலை எங்கும் உருவாகி உள்ளது: இப்போது வேலைக்காகவும் கல்விக்காகவும் பிற நாடு செல்லும் தமிழர்கள் எண்ணிக்கை மிகுந்து கொண்டே வருகிறது. மிகப் பெரிய அளவில் இல்லாமல் போனாலும் குறிப்பிடக்கூடிய அளவில் தமிழர்கள் உலகம் முழுவதும் பரவி நிற்கின்றார்கள்.

## ஈழத்தில் தமிழ்

இலங்கையில் நூற்றுக்கு 25க்கு மேல் தமிழர்கள். அவர்கள் தாய் மொழி தமிழே. 'இந்தியத் தமிழர்' என்று சிலரை ஆண்டு தோறும் இந்தியாவுக்கு அனுப்ப இலங்கை முயல்கிறது. தேயிலைத் தோட்டத்தை வளர்க்கும் எல்லோரையும் திருப்பி அனுப்பிவிட்டால் அங்கே பஞ்சம் தான் பிடுங்கித் தின்னும். இப்படி ஓர் இரண்டாட்டம் அங்கே உண்டு. சிங்கள மொழியே அங்கே தேசியக் கட்டாய மொழி தமிழையும் தேசிய மொழியாக்கவும் தமிழ்ப் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கவும் எடுத்துக் கொண்ட முயற்சிகள் இதுவரை வெற்றிகாணவில்லை. ஆனால், தமிழர் பண்பாடு தமிழர் வாழ்வில் மட்டுமன்றிச் சிங்களவர் வாழ்விலும் கலந்து ஒன்றாகி உள்ளது. மொழி ஒன்றே பிரித்து வைக்கின்றது.

கண்ணகி வழிபாடாம் "பத்தினித் தெய்யோ" வழிபாடு அங்கே நிலை பெற்றுள்ளது. அங்குள்ள திருகோணமலையும், திருக்கேதீஸ்வரமும் [illegible] முருகனைக் கண்டு பாடிய கதிர்காமம், இலங்கையில் [illegible] யில் சிங்களவர்க்கும் கோவிலாகச் சிங்களவர் கையில் இருக்கின்றது. ஆறுமுகநாவலர் வழியே வளர்ந்த தமிழ் இலங்கைத் தமிழல்லவா? தமிழில் உள்ள இரகுவம்ச காவியம் இலங்கைத் தமிழரசர் மொழி பெயர்த்ததே. சென்ற நூற்றாண்டில் 'சாமுயல் கிறீன்' என்பவரின் 'அனாடமி' போன்ற விஞ்ஞான நூல்கள் யாழ்ப்பாணச் செமினரி என்ற நிறுவனத்தினர் முயற்சியால் தமிழ் நூல்களாக வெளிவந்தன. சிங்களத்தில் எத்தனையோ தமிழ் சொற்கள் புகுந்துவிட்டன; அங்கு இன்று சிங்களவர் பின்பற்றும் புத்த மதத்தினைப் பழந்தமிழர் வளர்த்த கதையையும் மறந்துவிட முடியாது. சிங்களச் செய்யுள் அமைப்பும் தமிழ் யாப்பை ஒட்டி வளர்ந்த நிலையை இன்றும் காணலாம்: அங்கேயுள்ள பேராதெனியப் பல்கலைக்கழகத்திலும் கொழும்புப் பல்கலைக்கழகத்திலும் தமிழ்த்துறை இருந்து விளங்கக் காண்கிறோம்.

## பர்மாவில் தமிழ்

பர்மாவுக்கும் இப்படியே தமிழர்கள் முன்னும் பின்னும் சென்றனர். அங்கே அரிசி விளைவு பெருகிற்று: அங்கே சிவன் கோவில்கள், முருகன் கோவில்கள், தமிழ் பத்திரிகைகள், தமிழ் சங்கங்கள், தமிழகத்திலிருந்து செல்வோர் நிகழ்த்தும் பிரசங்கங்கள், ஆண்டு விழா சொற்பொழிவுகள் இவை எல்லாம் செட்டி மக்கள் செல்வத்தோடு ஓங்கி வந்தன. தேசியப்பற்று எழுந்ததும், இங்கொருகாலும் அங்கொருகாலும் வைத்திருக்கும் தமிழர்கள் பர்மியர் கண்ணுக்கு, அந்நாட்டு செல்வத்தை சுரண்டிச் செல்வோராகத் தோன்றினர்: உலகப் போரின் போது தமிழர் தங்கள் நாட்டுக்குத் திரும்ப வேண்டியதாயிற்று அங்கேயே தங்கி பர்மியர்களானவர்கள் சிலரே. மற்றவர்கள் தம்பொருளையெல்லாம் விட்டு விட்டு திரும்ப வேண்டியதாயிற்று: முன்னைய சீரும் சிறப்பும் எண்ணிக்கையின் மிகுதியும் இன்று இல்லாமற் போனாலும், சில தமிழர்கள் அங்கே புறத்தில் பர்மிய மொழி பேசினாலும், தாய்மொழியாகத் தமிழை வீட்டில் பேசி வாழ்ந்து வருகிறார்கள்.

## சிங்கை மலேசியா

மலேயாவுக்கும் சிங்கப்பூருக்கும் இப்படியே தமிழர்கள் பழங்காலத்தும் பிற்காலத்தும் சென்றார்கள். அங்கொருகாலும் இங்கொருகாலுமாக இருக்கின்றவர்கள் பாடே திண்டாட்டம். மற்றப்படி, அங்கேயே தங்கி விட்டவர்கள் அந்நாட்டை வளர்த்து வருகிறார்கள். மலேசிய மொழி, சீனமொழி என்ற இவற்றிற்கு அடுத்ததாக விளங்கும் மொழி அங்கெல்லாம் தமிழே ஆம்.

மலேசியா மலாயையே கட்டாயதேசியமொழியாக்கி உள்ளது. ஆனால் சிங்கப்பூரில் தமிழ்மொழியும் தேசிய மொழியாக விளங்குகிறது: [illegible]

இந்த இரண்டு நாடுகளிலிருந்தும் வெளியாகின்றன. செல்வாக்கிலும் ஓங்குகின்றன. சீனர்களின் உழைப்போடு ஒப்புக் கூற முடியாமற் போனாலும், அவர்களுக்கு அடுத்தாற்போல் உழைக்கின்றவர்கள் தமிழர்களே: இரண்டு நாட்டுப் பல்கலைக்கழகங்களிலும் தமிழுக்கு இடமுண்டு. ஆனால், முதலில் உயர்ந்தது கோலாலம்பூரில் உள்ள மலேசியப் பல்கலைக்கழக இந்தியத் துறையாகிய தமிழ்த்துறையேயாம். முதல் உலகத்தமிழ் கருத்தரங்கு மாநாடு கூடியது அங்கே தான்! சிவன் கோவில்கள், முருகன் கோவில்கள், மாரியம்மன் கோவில்கள் நிரம்பிய செல்வத்தோடு திருவிழாக்களின் பொலிவோடும் விளங்குகின்றன. தமிழ்ச் சங்கங்களும், சைவ சபைகளும், தமிழ்ப் பள்ளிக் கூடங்களும் அங்கே சிறந்த இடம் பெற்றுள்ளன. தமிழர் திருநாள் விழாவானது ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகிறது: தமிழர்கள் அமைச்சர்களாகவும் தொண்டாற்றுகிறார்கள். இரண்டு நாடுகளிலும் வானொலியில் பேச்சுக்களையும், செய்திகளையும், சிறந்த சொற்பொழிவுகளையும், இனியபாடல்களையும் இசையையும் தமிழில் கேட்டு மகிழலாம். தொலைக்காட்சியும் தமிழில் உண்டு: இந்தியாவில் இது வரை தமிழில் நிகழாதது அங்கே ஓங்கி வளர்ந்துள்ளது. மலேசியாவில்தான் பழைய 'கடாரம்' விளங்கிக் 'கடாரம் கொண்ட' சோழனையும் பாண்டியனையும் நினைவூட்டுகின்றது. அங்கே பழைய சிவன் கோவில் ஒன்று அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. (மதுரைப் பல்கலைக்கழகத்தில் மலேசிய மொழியைக் கற்பிக்கும் திட்டம் ஒன்று உண்டு.)

## கீழைக்கடல் தீவுகள்

கீழைக்கடல் தீவுகளில் எல்லாம் இந்தப் பழைய தொடர்பின் சின்னங்களை விளங்கக் காண்போம். தாய்லந்தில் (பாங்கொக்கில்) 40 ஆண்டுகள் முன்வரையிலும் அவர்களுடைய தேசிய ஊஞ்சல் திருவிழா "திருப்பாவை— திருவெம்பாவை" என்ற செந்தமிழ் பெயரோடு ஆரவாரமாக கொண்டாடப் பெற்று வந்தது. அதில் தேவர முதலிகள் பாடிய மூதற்பதிகங்களும், பூம்பாவைப் பதிகங்களும், திருவெம்பாவையும், திருப்பாவையும் பாடப்பெற்று வந்த செய்தி மந்திர நூலிலிருந்து வெளியாகிறது. (இதனைப் பற்றிச்சென்னை பாரி நிலையத்தார் வெளியிட்ட "சயாமில் திருவெம்பாவை—திருப்பாவை" என்ற எனது நூலில் விரிவாக கூறியுள்ளேனாகையால் இங்கே பார்த்துக் கூறவேண்டியதில்லை.) ஆங்குசென்ற தமிழர்கள், அந்தணர்கள் உட்படத் தாய்லந்து மக்களாகவே மாறிவிட்டனர். ஆனால், இப்போது வாணிகத்துக்காகப் போயுள்ளவர்கள் ஹாங்கொங், பாங்கொக், சைகோன் முதலிய இடங்களில் தமிழர்களாகவே செல்வச் சிறப்புடன் விளங்குகின்றார்கள். இவர்களில் பெரும்பாலோர் முஸ்லீம்கள். இந்தக் கீழைக் கடற்றீவுகளில் வாணிபம் செய்வோரின் துணையால் பல முஸ்லீம் கல்லூரிகள் தமிழ் நாட்டில் நடைபெறுகின்றன.

"ஆ கரும்புத்தோட்டத்திலே!" என்று பாரதியார் பிஜித்தீவுக்குச் சென்ற தமிழர்களது புலம்பலை பாடினார். இன்று நிலைமை மாறி உள்ளது. உரிமைக் காற்று எங்கும் வீசுகிறதல்லவா? அங்குள்ள தமிழர்கள் தமிழ் கற்க விரும்புகிறார்கள்: ஆனால், ஆசிரியர்களும் நூல்களும் கிடையாமல் அலைகிறார்கள். கயானாவிலும் தமிழர்கள் சென்று வாழ்கின்றார்கள்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிபிடிக்கும் கூட்டமே குறைகளைக் கேட்கத் தயக்கமேன்?

தெற்கிலே அரசினர்க்கு கொடிபிடிக்கும் கொள்கை யற்ற காங்கிரஸ் கும்பல்களே வடக்கிலே தமிழ் மக்கள் படும் இன்னல்களை இடித்துரைப்பதற்கு மட்டும் தயக்கம் கொள்வதேன்?

அரசினர்க்கு அதிக வருமானத்தைக் கொடுக்கும் வடபகுதி புகையிரத சேவையில் மாற்றாந்தாய் மனப்பான்மை காட்டப்படுவதேன்? நாளுக்குநாள் சீர்கெட்டுக்கொண்டு போகும் வடபகுதி புகையிரத சேவையைப் பற்றி தமிழரசு நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளும் புறமும் கூக்குரல் போடுகிறார்களே இவை யாவும் அரசினர் செவிகளில் விழவில்லையா? காங்கிரஸ் வாதிகளே இதை அரசினர்க்கு எடுத்துக் கூற உங்கள் வாய் அடைபட்டிருப்பதேன்?

வடபகுதி இரவு புகையிரதங்களில் மின் விளக்குகள் கிடையாது, குடிதண்ணீர் கிடையாது. பால்மணம்மாறு பாலகர்களை கையில் ஏந்தி வரும் தாய்மார்கள் விளக்குகளுடன் புகை வண்டியில் பிரயாணம் செய்கிறார்களே? பருவப்பெண்களோ ஏக்கத்துடனும், அச்சத்துடனும், பொழுது புலராதா, நாம் அடையவேண்டிய இடம் வந்துசேராதா என்ற நிம்மதியற்ற நிலையில் பிரயாணம் செய்கின்றனரே?

இந்தப் பரிதாபமான நிலையை எடுத்துக் கூறியும் உங்கள் அரசினர் பாராமுகமாய் இருப்பதேன்? மக்கள் அரசாங்கம் தமிழ் மக்களுக்குச் செய்யும் சேவை இது தானா? கொடி பிடிப்போரே, துதிபாடுவோரே இன்னும் உங்கட்கு சித்தம் தெளியவில்லையா? தமிழ் மக்கள் இந்த நாட்டிலே சுதந்திரமாக, தலை நிமிர்ந்து வாழ வேண்டாமா? வாழக் கூடாதா? காங்கிரஸ் கும்பல்களே காலம் கடந்து விடவில்லை. கட்டப்பொம்மனாக மாறி விடுங்கள்; எட்டப்பன் போர்வையை கழற்றி வீசி விடுங்கள். தமிழ் மக்களுக்கு வாழ் வளியுங்கள்;

—புலோலியூர் ராஜன்,
புலோலி.

# மக்கள் குரல்

## தினபதியாரே மூடுவாயை!

இலங்கைத் தமிழ் மக்களின் விடுதலை இயக்கமாகிய தமிழரசுக்கட்சியின் பன்னிரெண்டாவது மாநில மகாநாட்டைப் பற்றி சோதிடம் பார்க்கும் வேலையில் 'தினபதி' என்னும் தமிழ் ஏனப்பிறவி ஈடுபட்டுள்ளது.

தினபதியாருக்குநாம்ஒன்று சொல்ல விரும்புகிறோம். தமிழரசுக்கட்சியின் பன்னிரெண்டாவது மகாநாட்டை எப்போது வைக்க வேண்டும் எப்படி நடத்த வேண்டும் என்பது தமிழ் பேசும் மக்களையும் தமிழரசுத் தலைவர்களையும் அதன் அங்கத்தவர்களையும் சார்ந்தது.

சிங்கள அரசின் எச்சில் இலை தூக்கியும் புல்லுருவி வேலை பார்க்கும் உமக்கு என்ன உரிமையிருக்கிறது மகாநாட்டைப்பற்றி தீர்மானிக்க?

உமக்கு தமிழனென்னும் பெயரால் ஒன்றை தெளிவாக சொல்ல விரும்புகிறோம்: ... ... ... ... ... ... ... (தணிக்கை) சுதந்திரக் கனல் உன்னை சுட்டெரிக்கத்தான் போகின்றது. என்பதை சொல்லிவைத்து எச்சரிக்க விரும்புகின்றோம்;

மேலும், தமிழ் பேசும் மக்கள் இன்னும் ஆளப்படும் இனமில்லை— ... ... ... ... ... (தணிக்கை) ... ... ... ... தமிழரசு என்னும் அணியில் சேர்ந்து உழைக்க தமிழ் மக்களும் குறிப்பாக இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம்;

ச. குருநாதபிள்ளை,
மா. தாமோதரன,
க. தங்கத்துரை,
மா. சின்னத்தம்பி,
க. வடிவேல்,
திருக்கோவில்.

## தபால் பகுதியின் சீர்கேடு!

அன்பின் சுதந்திரன் ஆசிரியர் அவர்கட்கு.

ஐயா,

இத்துடன் ஒரு தந்தி ஒன்று அனுப்பி உள்ளேன்; கடந்த 8-2-72ல் எமது ஊர் குரும்பசிட்டியில் இருந்து எமது உறவினர் ஒருவரின் மரணத்தை அறிவிக்கும் முக்கியமான இத் தந்தி எமக்குக் கிடைத்ததோ ஐந்தாவதுநாள் 12-2-72ல் இத் தந்தியை தபாலில் அனுப்பி இருந்தாலும் 15 சதத்துடன் அடுத்த நாள் கிடைத்திருக்கும்.

எமது தமிழ் அமைச்சரின் நிர்வாகத்தில் இயங்கும் தபால் இலாகாவில் இப்படியான விஷயங்கள் நடைபெறுகின்றன. இவற்றுக்கு ஆகவேண்டியவை செய்ய ஏலாதவர்கள் இருந்தென்ன இல்லாவிட்டால் என்ன. தயவு செய்து இதை எங்கள் சுதந்திரனில் பிரசுரித்து (எமது) குனிந்து சிரந் தாழ்த்தி கரம் குவித்து வணங்கும் அமைச்சர் அவர்களுக்கு அறியத்தரும்படி அன்புடன் வேண்டுகின்றேன்;

இங்ஙனம்,
குரும்பசிட்டி கந்தையன்,
நீர்கொழும்பு;

## பட்டிருப்பு மகா வித்தியாலயத்தின் சீர்கேடுகள்

ஐயா,

எங்கள் பாடசாலையில், பாடசாலை ஆரம்பமானதில் இருந்து நடைபெறும் இன்னல்கள் பாடசாலையின் முன்னேற்றத்தைத் தடுப்பவையாக உள்ளன. பட்டிருப்புத் தொகுதியிலேயே மிகப் பெரிய பாடசாலையாகவும், ஏறத்தாழ 800 மாணவர்களைக் கொண்டதாகவும் இப்பாடசாலை திகழ்கிறது.

இங்கு கடந்த சில வருடங்களாகவே ஆசிரியர் பற்றாக்குறை இருந்து வருகிறது. இதைவிட, இங்கு புதிய கல்வித்திட்டத்தின் படிமுறையால் ஆறும் தரத்தில் மட்டும் மூன்று வகுப்புக்கள் உள்ளன; இத்துடன் இங்கு உயர்தர விஞ்ஞான வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பல வழிகளாலும் இங்கு சென்ற வருடங்களைவிட வகுப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஆனால் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவே இல்லை: பதிலாக அவ்வெண்ணிக்கை குறைந்துள்ளது: ஏறத்தாழ 10 இற்குமதிகமான ஆசிரியர்களே வந்துள்ளனர்.

புதிய கல்வித்திட்டத்தில் 6 ஆம் தர மாணவர்கள் படிப்பதற்குப் பதிலாக, ஆசிரியர்களின்றி அரட்டையடிக்கிறார்கள். எல்லாப் பாடசாலையிலும் படிப்பு நன்கு நடைபெறும் போது எங்கள் பாடசாலைக்கு மட்டும் ஏன் இந்தப்பாரபட்சம்?

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதமாகியும் எங்கள் பாடசாலையில் இன்னும் இருநேரப் பாடசாலை நடைபெறவில்லையென்பதை வித்தியாதிபதி அறிவாரா? எனவே இதற்கு உடனேயே உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதைச் சுதந்திரன் மூலம் வித்தியாதிபதியையும் ஏனைய அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறேன்.

இப்படிக்கு,
—கி. மகாதேவன்,
களுவாஞ்சிகுடி.

## தமிழ் மக்களே! சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!!

இலங்கை வாழ் தமிழ்ப் பேசும் மக்கள் திரயோசித்துத் தீவிரமாகச் செயல்பட வேண்டிய நிலையில் இன்று உள்ளார்கள். ஏனென்றால் 'காலம் நமக்காகக் காத்திராது' அன்று தொட்டு இன்றுவரையும் ஈழத் தமிழகத்தில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்று வந்திருக்கின்றது, இன்னும் வந்துகொண்டிருக்கின்றது இலங்கைத் தமிழரசுக்கட்சி. தமிழரசுப் பிரதிநிதிகளே பெரும்பான்மையோராக நாடாளுமன்றம் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இதிலிருந்து என்ன புரிகின்றதென்றால், தமிழரசுக்கட்சியின் கொள்கைகளையும் திட்டங்களையும் தமிழ் மக்களிற் பெரும்பான்மையோர் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்பதே;

ஆகவே தமிழ் மக்களே! தமிழ் மக்களின் தலைவர்கள் தாங்கள் தான் என்று கூறிக்கொள்ளும் பதவி ஆசை பிடித்தவர்களை தற்காலிகத் தலைவர்களை நம்பி இனி மேலும் மோசம் போகாது, தமிழ் தலைவர்கள், தமிழரசுத் தலைவர்கள் காட்டும் உரிமைப்பாதையிலே விறுநடை போடத்தயங்காதீர்கள்;

—மு. கிருஷ்ணதாசன்,
கள்ளிக்குளம்,
வவுனியா.

## தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு வேண்டுகோள்

அந்நியன் ஆட்சி அகன்று 24 வருடங்கள் ஆனாலும் அடிமை வாழ்வு அழகு தமிழ் பேசும் மக்களை விட்டபாடில்லை; திட்டமிட்ட சதியால் நில, குடி, உரிமைகள் பறிபோய்விட்டன விழிபோன்ற மொழியும் புறக்கணிக்கப் பட்டுவிட்டது. இக்கட்டத்தில் முற்போக்கு என்ற போர்வையில் ஜனநாயக குடி அரசை நிர்மாணிக்கும் நடவடிக்கையில்ஈடுபட்டிருக்கிறது அரசாங்கம்.

தமிழ் பேசுவோர் இத்திரு நாட்டில் அடிமைகளாய் அனுதைகளாய் ஆளப்படும் நிலை மாறவேண்டும். ஆட்சிப் பொறுப்பில் சரிநிகர் சமானமாய் பங்குகொள்ள வேண்டும் என்று மக்கள் விரும்புகிறார்கள். மக்கள் விருப்பம் என்ற போர்வையில் தமிழ் பேசும் மக்களின் உரிமை [illegible] இறது காட்டிக்கொடுக்கும் சுயவர்கள் ஒருசிலரின் ஒத்துழைப்புடன் தமிழ் பேசும் மக்களை நாசப்படுத்துகிறது அரசு;

தமிழ் பேசும் மக்கள் ஈழ நாட்டில் அழகு தமிழ் அரசு கட்டில் ஏறும் நாள் வரை எந்த அரசாங்கத் திரு விழாக்களிலும் கலப்பது பேதமை. மானமுள்ள பெற்றோர்கள் மலர்கொஞ்சும் விழியுடைப்பிள்ளைகளை இவ்வைபவங்களுக்கு அனுப்புதல் தவிர்க்கப்படவேண்டும். பாடசாலை அதிபர்களின் சுய இச்சைக்காக நமது பிள்ளைகள் அணிவகுத்து ஆட்சியாளருக்கு இச்சை காட்டி பதவி பெறுகிறார்கள் இதை மாற்றவேண்டும்;

அரசாங்கப்பணிமனைகளில் வேலைவாய்ப்புகள் இல்லை. இருப்பவர்களையும் சிங்கள மொழியில் தேர்வில்லை என்ற காரணத்தால் வேலை நீக்கம் செய்கிறார்கள்.

— கரவைச் சலீம்,
நல்லூர்;

## சாப்பிடுங்கள்!

—'தாமரைத் தீவான்'—

சாப்பாட்டுத்தமிழர்களே! சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்!
சாப்பிட்டால்தான்
ஏப்பமிட்டு, ஏப்பமிட்டு இருக்கையிலே இருந்தபடி
எலும்பில் நாவைக்
காப்பாற்றலாம்! அதனைக் காப்பாற்றினுலன்றோ
ஒத்துழைப்புக்
கூப்பாடுபோட்டிடலாம்! கொண்டாட்டந்தான், பிறகு
கும்மாளந்தான்!

சாப்பாடுமனிதனுக்கா? இல்லை, இல்லை அக்கூற்றுச்
சரியே இல்லை!
சாப்பாட்டிற்காகத்தான் மனிதன்! இது ஒன்றேதான்
தகுந்தகூற்று!
நாப்பாடும்பாட்டெல்லாம் நல்ல நல்ல சாப்பாடே!
நாப்பாட்டன்றோ,
கூப்பாடு! இல்லையெனில் தேசியமாம் கூப்பாடு
குலையாதாமோ?

சாம்போதும் சாப்பாடு சாப்பிட்டுச்சாப்பிட்டே
சாகவேண்டும்!
போம்போதும் பாடையுடன் சாப்பாட்டுப்பொதி
கொண்டேபோகவேண்டும்!
நான் இங்குவந்ததெல்லாம் நன்றாகச்சாப்பிடவே
நான்குவேளை!
ஆம்! இன்றேல் அண்டாபோல் பெருவயிறேன், நாவோடு
அகன்றவாயேன்?

நாடென்றும், மொழியென்றும், நமது தமிழ்
இனமென்றும் நடக்கொணுத
கேடென்றும் தருகின்ற வார்த்தைகளைக் கிண்டாமல்
கிடப்பீர்கம்மா!
வீடொன்றும் இல்லாமல் வீதியிலா திற்கின்றீர்?
வேண்டாம், வேண்டாம்!
பாடொன்றும் படவேண்டாம், பரந்த பெருநோக்கோடு
பகட்டாய் வாழ்வீர்!

பாடுங்கள், ஒத்துழைப்புப் பல்லவியைப்பாடுங்கள்!
பாடிப்பாடி
நாடுங்கள், உள்ளவரை நல்ல பிடிபிடியுங்கள்!
நாளும் நாளும்
ஓடுங்கள் பின்னாலே! உதறுங்கள் மானமெலாம்!
ஓடிஓடித்
தேடுங்கள் வேண்டியதை! திரியுங்கள் எப்போதும்!
சிறக்கும் வாழ்வு!

மொழி என்போர் குறுகியவர்! முற்றாக எல்லோரும்
மொழியால் வீணாய்
அழிவார்கள்! அழியட்டும், அதற்காக அஞ்சாதீர்!
அவர்நோய் தீர்க்க
வழியில்லை! அவர்கட்கு வாழ்க்கையிலே விருப்பில்லை!
வாய்திறந்தால்
ஒழிவில்லை, தமிழ் என்னும் ஓலந்தான்! உமதுநெறி
சாப்பாடு ஒன்றே

## தொழில் நுட்பக் கல்லூரி தமிழ்மன்றம் நடாத்திய தமிழ் விழா

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியின் தமிழ் மன்றத்தினர் சென்ற 20. 2. 72 ஞாயிறன்று தமது கல்லூரி மண்டபத்தில் தமிழ் விழா எடுத்து மகிழ்ந்தனர்: விழாவைக் கண்டுகளிக்க வந்தவர்கள் அனைவர்க்கும் தமிழின்பம் பருகி மகிழ ஏற்றதொரு வேளையாக இத்தினம் அமைந்தது. முன்னாள் இறைவரி ஆணையாளர் திரு. ச. சிற்றம்பலம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்பித்த இவ்விழாவில் மன்ற இதழான "தமிழருவி"யின் மூன்றாவது இதழ் வெளியிடப்பட்டது;

பி. ப. 4,30 மணிக்கு மன்ற மாணவிகள் தமிழ்த்தாய் வணக்கம் பாட ஆரம்பமாகிய இவ்விழாவில் பிரதம அதிதியின் உரையையடுத்து மலர் வெளியீடு இடம்பெற்றது. "தமிழருவி" இதழுக்கு மதிப்புரையாற்ற வந்த, தலைநகரில் புகழ் பூத்த வழக்கறிஞர்களில் ஒருவரான மு. பா. யோகசுந்தரம் அவர்களின் உரையில் சில குறிப்பிடத்தக்க அம்சங்களை அவதானிக்க முடிந்தது. மதிப்பேரடு அழைத்தவர்களை மகிழவைக்கும் நோக்குடன் மதிப்பீட்டாளர்கள் மெச்சிப்பேசுகின்ற வழக்கமே இன்றுள்ளது. ஆனால் அதற்கு மாறாக மலரில் இடம்பெற்ற சில தவறுகளையும் சுட்டிக் காட்டிப் பேசிய மதிப்புரை மதிக்கத்தக்க தொன்றாக அமைந்தது. நூலின் முதற் பிரதியை மெய்கண்டான் அதிபர் இரத்தின சபாபதி அவர்கள் பெற்றுக்கொண்டார்.

அடுத்து இடம் பெற்ற அரங்கில் கொழும்பு பொது சன நூல் நிலைய அதிபர் எஸ். எம். கமால்தீன், இளைப் பயறிய கல்லூரி அதிபர் டீ. டி. நாணயக்கார, திரு. நவசோதி ஆகியோர் கலந்து கொண்டனர். திரு. நாணயக்கார அவர்கள் தமது மழலைத் தமிழால் "சைவமும் பௌத்தமும்" பற்றி ஆற்றிய ஆய்வுரையும், நவஜோதி அவர்களின் "இன்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஒற்றுமை பற்றி ஒரு வார்த்தை!

'ஈழம் வாழ் தமிழ் பேசும் இனம் ஒற்றுமைப்பட வேண்டும்' என்று இப்போது ஒருசிலர் குரல் கொடுக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

இப்படியான குரல் அடிக்கடி ஈழத்தமிழர் வரலாற்றில் எழுந்துள்ளதை நாம் அறிவோம்.

இன்று ஈழத்தமிழருக்கு 'புதிய அரசியல் சட்டம்' எனும் பெயரில் எழுந்துள்ள பேரின்னல்—இதற்கு முன்னர் என்றைக்குமே ஏற்பட்டதில்லை..........................................

.................. தணிக்கை ..................

குடியரசு பிரகடனப்படுத்தப்படும் நாள் தமிழினத்துக்கு கொள்ளிவைக்கும் நாளாகவே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில் 'ஈழத்தமிழினம் ஒற்றுமைப்படவேண்டும்' என மக்கள் இடையே எழுந்துள்ள கருத்து பொருள் நிரம்பியதே! ஆனால் இந்த ஒற்றுமையை ஏற்படுத்துவது எப்படி?

'தமிழினத்தின் ஒற்றுமை' என்பதை 'தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமை' என்று சிலரும் 'தமிழ் மக்களின் ஒற்றுமை, என்று வேறு சிலரும் கருதுகின்றனர்.

தனி மனிதர் சிலரை தங்கள் ராஜாக்களாக சோடித்து மாலை சூட்டி அலங்கரித்து சுற்றுலா வந்த சிலர், அந்தத் தனி மனிதர்களே தமிழினம் என்று கருதி—அவர்களையே இன்னுமின்னும் தலையில் தூக்கிவைத்துக்கொண்டு கூத்தாடப் பார்க்கிறார்கள்.

சோதனை நிரம்பிய இவ்வேளையில் சுயநல வெறியர்களுக்கு முண்டு கொடுக்கும் சுயபோகிகளின் விளையாட்டை நாங்கள் கடைச்சுடக் கண்டிக்கிறோம்.

விடுதலைப் போரில் ஈடுபடும் ஓர் இனம் ஆற்று வெள்ளம் போல் தானாக இழுபட்டு—உணர்ச்சி நிலையில் ஓட வேண்டுமே தவிர—தலைவர்களை தேடி இழுத்து வந்து—ஒரு விடுதலைப் போரில் கட்டாயமாக ஈடுபடுத்துவது என்பது நகைப்புக்குரியதாகும்.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரை தமிழினத்தின் விடுதலை என்னும் இலக்கை நோக்கி பல்வேறு வழிகளில் உழைத்த தமிழ்த் தலைவர்கள் தாமாக ஒன்றிணையும் காலம் நெருங்கி விட்டது. அவர்கள் இயற்கையான விடுதலை ஓட்டத்தில் ஒன்று கலந்து விடுவார்கள். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக தமிழினத்தின் பகைவர்களோடு கொஞ்சிக் குலவி — தமிழினத்திற்கு குழிபறித்து வந்த — கொடிய தமிழ்த் துரோகிகளும் இவ்வேளையில் ஒரு விடுதலை இயக்கத்தில் இணைந்து ஒன்றுபடவேண்டும் என நாம் விரும்பலாமா?

பயங்கரமான இவ்வேளையில் பாம்புகளைத் தூக்கி நமது மடிக்குள்ளே போட்டுக்கொள்வது போல் அது ஆகிவிடாதா? நாம் விழிப்போடு எண்ணிப்பார்க்க வேண்டும்.

சுயநல எண்ணம் பிடித்த தலைவர்களைவிட சுதந்திர வேட்கை மிக்க தமிழ் மக்களை நாம் பெரிதாக மதிப்போமானால் தமிழினத்தின் ஒற்றுமை என்பது "தமிழ் மக்களின் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றுதான் எண்ணுவோமே தவிர "தமிழ்த்தலைவர்களின் ஒற்றுமையாக" அது இருக்கவேண்டும் என்று ஏங்கமாட்டோம்.

ஆம் தமிழ் மக்கள் ஒன்றுபட்டு அறப்போர் புரியும் நாள் அண்மித்துவிட்டது. சாதி — மத — பேதங்களை சாகடித்து — சங்கத் தமிழும் தங்கத் தமிழினமும் வாழ தமிழினம் சூளுரைக்கும் வேளை சமீபித்து விட்டது" "வெள்ளம்போல் தமிழர் கூட்டம் — வீரங்கொள் கூட்டம் — அன்னார் உள்ளத்தால் ஒருவரே!" எனும் ஒரு பெரும் ஒற்றுமைப் பொழுது உதயமாகிவிட்டது.

— — — தணிக்கை — — —

— — — — —

— — — — —

— — — — —

இளைஞர்களின் விழிகளில் இன்று நாம் புதியதோர் இன விடுதலை வேட்கை ஒளிவிடக் காண்கிறோம்! இந்நிலையில் "தலைவர்கள்" எனப்படும் சுயநலத் துரைப் பிறவிகள் சிலரிடையே ஒட்டு வேலை செய்வதில் காலத்தை விரயம் செய்வதை விட்டு தமிழ் மக்களின் ஒற்றுமையை கட்டி எழுப்புவதிலும் தமிழினத்தின் வீர உணர்வைத் தட்டி எழுப்புவதிலும் நம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும்!

# 'பெடரல்' கட்சி கோரிக்கைகள் நியாயமானவை!

## அக்கட்சியுடன் உடன்பாடு காண பிரதமர் முன்வர வேண்டும்!

### சென்னை தினமணி ஆசிரிய தலையங்கம்!

'இலங்கை அரசியல் நிர்ணயசபை தயாரித்துள்ள சாஸன நகலை அடியோடு நிராகரிப்பதாக பெடரல் கட்சி முடிவு செய்துள்ளது. இந்தக் கட்சிதான் இலங்கை வாழ் தமிழர்களில் பெரும் பாலோரின் பிரதிநிதியாக இருந்து வருவது. நகல் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இயலாமைக்கான காரணங்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற விஷேச மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானத்தில் விளக்கப்பட்டுள்ளன. மொத்தத்தில் நகல் திட்டமானது இலங்கை வாழ் இந்தியரை இரண்டாந்தர பிரஜைகளாக்கி விடுகிறது என்பதுதான் பிரதான ஆட்சேபம். இலங்கையின் வடக்கு, கிழக்கு பகுதிகளில் தமிழர் பெரும்பாலோராக வசிக்கிறார்கள். அப்பிரதேசமானது பெடரல் அமைப்பின் பகுதியாக இருந்து, சுயாட்சியை அனுபவிப்பதற்கு வழி செய்ய வேண்டும் என்பது பெடரல் கட்சியின் நெடுநாளைய கோரிக்கை. இதை அரசியல் நிர்ணய சபை அடியோடு புறக்கணித்துவிட்டது. இது அக்கட்சியினருக்கு விசேஷ அதிருப்தியை கொடுத்துள்ளது.

'சிங்களத்தைப் போலவே தமிழும் அரசின் நிர்வாகப் பணிகளிலும் கோர்ட்டுகளிலும் சமவுரிமை பெறுவதாக இருக்க வேண்டும் என்பது பெடரல் கட்சியின் மற்றொரு முக்கியமான கோரிக்கை; அதுவும் ஏற்கப்படவில்லை. மைனாரிட்டிகள் விஷயத்தில் பாகுபாடு செய்யும் வகையில் சட்டம் எதையும் இயற்றக் கூடாது என்ற ஷரத்து இது வரை அமுலாகி வந்த அரசியல் சாஸனத்தில் இருந்தது; அதை புதிய நகல் திட்டத்தில் நீக்கி விட்டார்கள். இதன் விளைவாக மைனாரிட்டியின் அச்சம் அதிகரித்துள்ளது. பௌத்த மதத்தைப் போற்றிப் பேணுவது அரசாங்கத்தின் கொள்கையாக ஏற்கப்பட்டுள்ளது. இந்த ஏற்பாட்டின் கீழ் பிற மதங்கள் புறக்கணிக்கப்படும்; தமிழர்களின் ஹிந்து சமயம் பாதகமடையும் என்று பெடரல் கட்சி அஞ்சுகிறது. இந்தக் காரணங்களால் நகல் திட்டத்தை நிராகரிப்பதாக அது முடிவு செய்துள்ளது.

'தமிழ் மக்களின் பெரும்பாலோரின் ஸ்தாபனத்தை அடியோடு புறக்கணித்துவிட்டு புது அரசியலை வெற்றிகரமாக நடத்தி வைப்பது சாத்தியமல்ல. பெடரல் கட்சியின் கோரிக்கைகள் நியாயமற்றவை என்று சொல்ல முடியாது. நீக்குப் போக்குடன் கூட, விட்டுக் கொடுத்து உடன்பாடு காண அது எப்பொழுதுமே தயாராக இருந்து வந்துள்ளது.

'எனவே நகல் திட்டத்தை இறுதியாக நிறைவேற்றுவதற்கு முன், ஆட்சியாளர் மறுபரிசீலனை செய்து, பெடரல் கட்சியுடன் பேசி உடன்பாடு காண முயல்வதுதான் விவேகமாகும்.

'தேச பந்தோபஸ்து உட்பட இலங்கையை எதிர் நோக்கியுள்ள பல பிரச்சினைகளைச் சரிவர சமாளிப்பதற்காக, எதிர்க்கட்சியினரும் சேர்ந்த தேசிய மந்திரிசபையை அமைப்பதில் பிரதமர் ஸ்ரீமாவோ அக்கறை காட்டி வருவதாகக் கூறப்படுகிறது. அந்தத் தேசிய அமைப்பில், பெடரல் கட்சியும் உவகையுடன் ஈடுபடுவதற்கான நிலைமையைத் தோற்றுவிக்கும் விவேகம் அவருக்கு இருக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

—தினமணி (ஆசிரிய தலையங்கம் 3-2-72)

## கள்ளிறக்கும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் சோசலிச அரசாங்கத்தில் 15,000 தொழிலாளர் வாழ்வு பாதிக்கப்படுகிறது என்று சொல்கிறீர்களே—இது என்ன அநியாயம்!

முதலாளித்துவ அரசில் தொழிலாளர்வாழ்வு பாதிக்கப்பட்டால் பரவாயில்லை—அது முதலாளித்துவத்தின் கொடுமை என்று கூறலாம்—ஆனால் உங்கள் சோசலிச அரசில் அல்லவா தொழிலாளி வாழ்வு பாதிக்கப்படுகிறது. அதிலும் ஒரு தொழிலாளியா? இரண்டு தொழிலாளிகளா? நீங்களே சொல்கிறீர்கள் பதினையாயிரம் தொழிலாளர்கள் என்று!

தோழர் விக்கிரமசிங்கா அவர்களே! உங்கள் தோலில் சூடு — சொரணை ஏதாவது இருந்தால் இனிமேல் 'எங்கள் அரசாங்கம் சோசலிச அரசாங்கம்' என்று சொல்லாதீர்கள் —வெட்கம்! வெட்கம்!!

—

## கருணாநிதி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாய்ப்பிடுவோம்? சுயாட்சி கேட்டு போராடுகிறோமே கருணாநிதி — வரு,கிறீர்களா இங்கும் அதே சுயாட்சியைக் கேட்டுப்பார்ப்போம்!

ஏழையார் குமார குரியரே! அன்று கிலைட் இளைப் பாடத்தில் வெட்டிவெறித்த அரசாங்கத்தின் அடி வருடியே! நீரா கருணாநிதி! கருணாநிதிகளுக்கு ஏது யாவும்? நீ ... விடு!

# அரசபணி கடிதங்களில் தமிழ் முத்திரை

## பண்டிதருக்கு அரசு பணிந்தது!



### மாட்டுவண்டிப்பு பின்நிற்காது!

"திருக்கோணமலை தொடக்கம் தெற்கே திருக்கோவில் பொத்துவில் வரையுள்ள கிழக்கு மாகாணத் தமிழ் மக்கள் தமிழர் தம் உரிமைப் போராட்டங்களில் கலந்துகொள்ள எப்போதும் தயங்க மாட்டார்கள்" என்று திருக்கோயில் அறப்போர் அணித்தலைவர் அரியநாயகம் அவர்கள் இன்னுர் கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையில் கூறினார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களோ— நாட்டின் பல்வேறு திணைக்களங்களோ அனுப்பும் கடித உறைகளில் தமிழ் முத்திரை (பிராங்) பொறிக்கப்படுவதை அரசாங்கம் சிலகாலமாக தடுத்து வந்தது. இதை எதிர்த்து நாடாளுமன்றத்தில் பண்டிதர் இரத்தினம் அவர்கள் பலமுறை குரல்கொடுத்து வந்தார். இப்போது பண்டிதரின் போராட்டம் வெற்றி பெற்றிருக்கிறது. பண்டிதருக்கு அரசு பணிந்திருக்கிறது!

'அரசபணி' என கடித உறைகளில் தமிழிலும் முத்திரை குத்தலாம் என அரசு முடிவுசெய்திருக்கிறது.

## அரங்கேற்றம்

எஸ். பொ: இயற்றியுள்ள 'அப்பையா காவியம்' 27-2-72 அன்று மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணத்திலே அரங்கேற்றப்படுகின்றது. அக்காவியத்திலே இடம்பெறும் ஒரு பாடல் கீழே பிரசுரிக்கப்படுகின்றது.

### தமிழ்

வன்னநடை வசனநடை என்றுபலர் போற்றும்
வகையாகத் தமிழ்மாது அரசநடை போட
அன்னவளின் பேரழகைப் பார்த்தவர்கள் பூரித்து
அசைபொங்கித் தாளமிடக் கன்னிநட மாட
மின்னலிடும் பேரொளியைப் பெருந்தவத்தர்வேண்ட
மேவியதால் நாவலரும் தம்பின்னத் தம்பி
அன்னவரோடருள் ஞானப் பிரகாசர் என்ற
அனைவரையும் தமிழ் மாது அரவணைத்து நின்றாள்.

—எஸ். பொ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வாவின் கருத்துக்களை மலையகமெங்கும் பரப்புவீர்!

## தொழிலாளர்களின் துயர்துடைக்கும் உமது பணிகண்டு பூரிக்கிறேம்!

### இ. தொ. கா. தலைவர் தங்கத்துரைக்கு ஒரு கடிதம்!

சுயநலமிகள் சிலர் வடஇலங்கைத் தமிழர், கிழக்கிலங்கைத் தமிழர், மலை நாட்டுத் தமிழர் என்றெல்லாம் பிரிவினையை ஊட்டி தமிழ் இனத்தைக் கூறுபோட முயற்சிக்கும் இவ்வேளையில் தாங்கள் பரந்த அடிப்படையில் தமிழ் பேசும் இனத்திற்காக ஆற்றும் சேவையை இலங்கைவாழ் தமிழ் பேசும் இனம் என்றும் மறக்கப்போவதில்லை.

அகில இலங்கை தமிழரசுக் கட்சி வாலிப முன்னணித் தலைவராகத் தங்களை இலட்சோப லெட்சம் இளைஞர்கள் ஏற்றிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நாட்டின் எப்பாகத்திலிருந்தும் வருகின்ற தமிழ் பேசும் இளைஞர்கள் நலன் கருதி கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் தாங்கள் தங்களது உடல் நிலையையும், வெய்யிலையும், மழையையும் பொருட்படுத்தாது அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வைப்பதாக அறிகின்றேன். இலங்கையில் எந்தவொரு அரசியல் தலைவரும் இவ்வித மான சேவைகளைச் செய்ததாக நான் அறியவில்லை.

ஒரு காலத்தில் அண்ணாத்துரை அவர்களின் அன்புத் தம்பியும் இன்றைய தமிழக முதல்வருமான திரு. கருணாநிதி அவர்கள் இளைஞராக இருந்த வேளையில் எத்துணை உற்சாகமும் இனப்பற்றும் கொண்டு சேவை செய்தாரோ அதேபோன்றுதான் தந்தை செல்வா அவர்களின் செல்வத்துரையான நீங்கள் தளபதி அமிர்தலிங்கம் அவர்களின் அன்புத் தம்பியான நீங்கள் இன்று இலங்கை வாழ் தமிழ் பேசும் இனத்திற்குச் சேவை செய்கின்றீர்கள்.

1948ம் ஆண்டு ஆட்சியில் இருந்த அரசாங்கம் மலையகத் தமிழ் மக்களின் மொழி உரிமை, குடி உரிமை, அரசியல் உரிமை முதலானவைகளைப் பறித்த வேளையில் அப்போது அவ்வரசாங்கத்திற்கு ஆதரவு காட்டிய ஜீ. ஜீ. பொன்னம்பலம் அவர்களுடன் சண்டை பிடித்துக்கொண்டு காங்கிரசில் இருந்து விலகி எமது நலன் கருதி தந்தை செல்வா அவர்கள் தமிழ் அரசுக் கட்சியை ஸ்தாபித்தார்.

எமது சமூகத்தின்மேல் இவ்வளவு ஈடுபாடு கொண்ட தந்தை செல்வா அவர்களின் நல்லாசியையும் நல்லாதரவையும் பெற்ற நீங்கள் என்றோ ஒருநாள் இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த தனிகத் தமிழ் தலைவராகத் திகழ்வது நிச்சயம். அந்த நந்நாள் தங்களை எதிர்பார்த்த வண்ணமேயிருக்கின்றது.

ஏன் இன்று கூட நீங்கள் ஆயிரம் ஆயிரம் மலையகத் தமிழ் மக்களின் தங்கத் தமிழ் தலைவராகத்தான் திகழ்கின்றீர்கள். மலையகத்திலே குறுகிய காலத்தில் தோன்றி வளர்ந்து மலையகப் பாட்டாளி மக்களுக்கு அளப்பெரிய சேவைகளைச் செய்துவரும் இலங்கைத் தொழிலாளர் கழகத்தின் தலைமைப் பதவியை வயதில் இளையவரான உங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தன் பலம் இன்றும் நீங்களும் தமிழர் தலைவன் தான். தமிழ் இனத்தின் இளம் தலைவரான தங்களை ஆயிரக் கணக்கான மலையகப் பாட்டாளி மக்கள் போற்றிப் புகழ்கின்றனர். தங்கள் தலைவன் தங்களுக்காகப் பாராளுமன்றத்தில் எழுப்பும் உரிமைக் குரல்களைப் பத்திரிகை வாயிலாக அறிந்து ஆனந்தம் அடைகின்றனர்.

கடந்த மாதம் தாங்கள் பாராளுமன்றத்திலே தோட்டப் பாட்டாளி மக்களின் நலன் கருதி மூத்தான கருத்துக்களை அழகுற எடுத்தியம்பியதை பத்திரிகை வாயிலாக அறிந்த மலையகத் தமிழ் மக்கள் மகிழ்ந்தனர். மக்கள் மட்டும் மகிழ்க்கவில்லை மலையகப் பாட்டாளி மக்களை ஏமாற்றும் வேஷதாரிகளான தொழிற் சங்கவாதிகளும் மலைத்தனர். அவர் தம் முகமூடி கிழிந்து விடுமோ என்று கூட எண்ணுகின்றனர். எந்தத் தொழிற்சங்கத் தலைவரும் இதுவரை வெளியிட்டிராத நலன்மிகு கருத்துக்களை அன்று பாராளுமன்றத்தில் பாங்குடன் வெளியிட்டிருந்தீர்கள். வாழ்க உங்கள் செயல் திறன்.

உங்களது தொகுதிக்கு வெளியில் இத்தனை திறம் மிகு சேவைகளைச் செய்யும் தாங்கள் தங்களது தொகுதிக்கு எத்துணை திறம்மிகு சேவைகளைச் செய்திருப்பீர்கள் என்பதை உங்கள் தொகுதி மக்கள் நன்கறிவர்.

## மலையகத்திலே.........

**கே. ஈழத்துராஜா**

---

உரைச் சித்திரம்:

## ஆங்கிலம் தூங்கவில்லை தமிழுக்காக தமிழோ தூங்கியது இனிமையாக!

இலங்கை அரசினரால் வெளியிடப்பட்ட அந்த ஆங்கில நூல் கண்ணீர் விடாக்குறையாகக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தது. நினைக்க அதன் நெஞ்சு கவலையால் நிறைந்தது. தூக்கமேயில்லை.

எங்கிருந்தோ ஆந்தையொன்று கீச்சிட்டு அமைதியைக் கெடுத்தது. டிங்...டிங்...சுவர் மணிக்கூடு இரண்டுதரம் ஒலித்து ஓய்ந்தது.

நித்திரையின்றி இங்கும் அங்கும் புரண்டு உருண்ட அதற்கு, பாயின் நடுவில் சென்றதும் கொர்...கொர் என்ற குறட்டை விடும் ஓசை கேட்டது. பேரிரைச்சலாக இருந்த அவ்வொலி அதற்கு பெரும் எரிச்சலையும் கொடுத்தது.

என்னடா இது, அதுவும் தமிழ் நூல் இப்படி நிம்மதியாகத் தூங்குகிறதே! இதை விட்டேனு பார் என முழுப் பலத்தையும் சேர்த்து எட்டி ஒரு உதை கொடுத்தது. அதைச் சிறிதும் பொருட்படுத்தாமல், மெதுவாக மறுபக்கம் திரும்பிப்படுத்து மீண்டும் குறட்டைவிடவே, ஆத்திரங்கொண்ட ஆங்கில நூல், பக்கத்தில் இருந்த கவராயத்து ஆணியை எடுத்து திடீர் எனக் குத்தியது. ஆணி சுரீர் எனத் தைக்கச் சடாரென எழும்பும் என எதிர்பார்த்த ஆங்கில நூலுக்கு ஏமாற்றந்தான் கிட்டியது.

'ஓகோ தமிழ்நூலல்லவா, தடித்த தோலென்பதை மறந்துவிட்டேனே' என்றது, உடம்பிலுள்ள வலு முழுவதையும் பயன்படுத்தி கவராயத்து ஆணியால் ஓங்கி ஒரு குத்துக்குத்தியது. இத்தாக்குதலால் சிறிது அரண்ட தமிழ் நூல் அரைத் தூக்கத்தில் ஆங்கில நூலைக் கேள்விக் குறியோடு நோக்கியது.

'உன் இனத்தவரின் நினைவால் எனக்கு நித்திரையில்லை நீ மட்டும் சுடு சொரணையற்று நிம்மதியாகத் தூங்குகிறாயே. உனக்கு மானம் இல்லையா? எதுவித உணர்ச்சியும் இல்லாமல், எப்படித்தான் நிம்மதியாகத் தூங்குகின்றாயோ?' என உணர்வின் வயப்பட்டு பேசிக் கொண்டிருந்த ஆங்கில நூலை இடைமறித்த தமிழ்நூல்—

'போடா போ, இனமும், சனமும், வேதாந்தம் பேசுகின்றாய் வேதாந்தம்: நித்திரையில்லையென்றால் இரண்டு போத்தல் இந்துக் கள்ளு வாங்கி [illegible] யான நித்திரை வரும் என்று சொன்ன ஈழத்தரசின் தமிழ் நூல் மீண்டும் கும்பகர்ணப் படலம் வாசிக்கத் தொடங்கியது.

ஆங்கில நூலுக்கோ இப்போது இன்னும் பெருங் குழப்பமாகப் போய்விட்டது. 'சீச்சீ இப்படியும் மனநிலையுள்ள ஒரு இனமா' தனக்குள் சொல்லிக்கொண்டது. அதற்கு தன் மனக்குமுறலை யாருக்காவது சொன்னாலொழிய தூக்கம் வரமாட்டாது என்ற நிலை.

யாரோ வெளியில் சென்று சிறுநீர் கழித்து மீளும் அரவம் கேட்டு அப்பக்கம்பார்த்தது. அடையாளம் தெரியவில்லை அண்மித்துப் பார்த்தது. அது சிங்கள நூல்.

'நீ இன்னும் தூங்கவில்லையா?' என்று சிங்கள நூல் கேட்டது.

'இல்லை நண்பா, என் மனம் அமைதியிழந்திருக்கிறது. தூக்கம் வர மறுக்கிறதே.'

'ஏனப்பா, அப்படியென்ன தொல்லையுனக்கு?'

'எனக்கென்றால் ஒன்றுமில்லை, இருந்தாலும் ஏதோ ஒன்று என்னைப் போட்டு இரவுபகல் குடைந்துகொண்டேயிருக்கிறது. எனக்குக் கைகொடுப்பவர்களை— நான் கடமைப்பட்டவர்களை கவனிக்கமுடியாமல்— நன்றிதன்னும் செலுத்தமுடியாமல் இருப்பதுபோன்ற ஒரு எண்ணம்; இது என் உள்ளத்தில் மிகுந்த வேதனையைக் கொடுக்கின்றது. அதைச் சொன்னால் நீ என்ன நினைப்பாயோ தெரியாது' என்ற அது மீண்டும் தொடர்ந்தது.

'நண்பா, இன்று ஈழத்தில் என்னைக் காப்பவர்கள் உன்னினத்தில் மிகக் குறைவு. தமிழர்கள்தான் என்னை அதிகம் கவனிக்கிறார்கள். அவர்களில் சிலர் தங்கள் மொழி [illegible] அப்படியிருக்க என்னுள் வரும் கதாபாத்திரங்களின் பெயர்கள் மட்டும் சிங்களப் பெயர்களாக இருக்கிறதே; என்னை ஏற்றிப் போற்றும் தமிழர்களின் பெயர்கள் என்னுள் இல்லையே. இது நன்றிகெட்ட செயலல்லவா?'' என்று சொல்லி ஒரு பெருமூச்சுடன் நிறுத்தியது.

''அடேயப்பா இதை நினைத்தா நீ துன்பப்படுகிறாய். தேவையில்லாத கவலை நண்பா, தேவையில்லாத கவலை கொஞ்சம் கவனமாகக் கேள்... தமிழர்கள் இனம் மாறுகிறார்கள். காமினி, ரஞ்சித், பிறேமா, நிமால், ஹேமா இப்படியான பெயர்களையே தங்கள் குழந்தைகளுக்குச் சூட்டுகிறார்கள், சிலர் தெரியாத்தனத்தால் இப்படிச் செய்கிறார்கள். பலர் பட்டம், பதவிபெறலாம் என்ற எண்ணத்துடன் மட்டுமல்ல பயத்திலும் இப்படிச் செய்கிறார்கள். எங்கள் பெண்களைப்போல கண்டிய உடையும் அணியத் தொடங்கிவிட்டார்கள். ஏன் நண்பர் அவர்கள் என்னையும்கூட. மிக அன்போடு கட்டித் தழுவுவதை நீ பார்த்திருப்பாயே!''

ஆங்கில நூல் கொட்டாவி விட்டது. ஆ... ஆ... ஐயோ தமிழா...கொர்...!கொர்...!!

கிழக்கிலிருந்து ஒரு சேவல் கூவியது! அதைத் தொடர்ந்து வேறும் சேவல்கள் கூவின.

—''நவமணி''

---

## வவுனியாத் தொகுதியில் புதிய தமிழரசுக் கிளைகள்

நெடுங்கேணிக் கிராமசபைக்கு உட்பட்ட பகுதிகளில் இரண்டு தமிழரசுக் கட்சிக் கிளைகளை வவுனியா நா. உ. திரு. செல்லத்தம்புவும் கோப்பாய் நா. உ. கதிரவேற்பிள்ளையும் ஆரம்பித்து வைத்தனர்.

ஊஞ்சால்கட்டிப் பிரிவுக்கிளை ஒதியமலையும் உட்பட

தலைவர் சு. நித்தியானந்தன், உப - தலைவர் க. தர்மலிங்கம், செயலாளர் க. நவரத்தினம் (சேனிவண்ணன்) உப - செயலாளர் வே. நாகமணி, பொருளாளர் மு. வல்லிபலிங்கம், நிர்வாக சபை வே. செல்லத்துரை, மு. நாகலிங்கம், க. ஜீவரத்தினம், இ. செல்வராசா, ச. சரவணமுத்து, கனகரத்தினம், கந்தையா.

நெடுங்கேணிப் பிரிவுக்கிளை

தலைவர் இ. உ. வல்லிபுரம், (கி. ச. தலைவர்) உப - தலைவர் இ. செல்லத்துரை, செயலாளர் நா. சாரநாலிங்கம், பொருளாளர் க. நடராசா, நிர்வாகசபை பொ. இராசம், த. சின்னத்தம்பி, சி. சின்னையா, மு. கந்தையா, துரைசிங்கம், பொன். கந்தசாமி, பெ. பத்மநாதன்.

---

## திருந்திடுவார்!

—'சம்மாந்துறை அலீஸ்'—

மேல்நாட்டுப் பாணிதனை
மோச்சமெனச் மெச்சியிங்கே!
ஆல்விழுதாய் வாலிபர்கள்
ஆட்டுக்கடா முடிவளர்த்து!
கால்வயிற்றைக் காசில்லா
காவலர்களாய் வாழ்கின்றார்?

உரித்தவித்த பனங்கிழங்காய்
உலகத்தார் ருசித்திடவே;
அரிதட்டு ஆடையினிலே
அலங்கரித்து அலைகின்ற
வரிகட்டா நாயதுபோல்
வனிதையர்கள் சிலபேரும்...

மதிகெட்டே அலைகின்றார்;
மானத்தைத் திறந்திங்கே!
விதியிட்ட வரமன்று
விணையவர் வீழ்கின்றார்;
சுதிகெட்ட நடனம்போல்
சுவைகெட்டு அசைகின்றார்

எம்நாட்டு நாகரீகம்
ஏற்றபலன் கண்டதுயார்
பம்மாத்து நாகரீகம்
பலனைத்தான் தருமதம்மா?
எம்மட்டு இவர்நடப்பு
திருந்திடுவார் விளைவாரிவால்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவனும் மனிதன் தான்....!

எமது சிறுகதை

அருள் அரசன்

நீண்டு வளைந்து நெளிந்த பாதையைக் கண்கள் நோக்குகின்றன. எங்கோ தொலைவிற் கண்களுக்கு விருந்தளித்த அந்தச் சிவந்த வாகனத்தை அண்மையிற் கண்டதும் மனச் சோர்வு முட்டி மோதுகின்றன.

கடிகாரத்தை உற்று நோக்குகின்றேன். இரு காதலர்கள் ஒருவரை ஒருவர் முத்தமிட்டு மோந்து கொண்டிருக்கின்றார்கள். அப்பொழுது நேரம் சரியாக ஆறுமணி முப்பத்திரண்டு நிமிஷங்கள் தான்.

வஸ்சுக்காக விதிக்கு வந்து சரியாக அரைமணி நேரமாகி விட்டது. வஸ்ஸின் வாலடையைக் கூட இந்தப் பக்கமே காணவில்லை.

மட்டக்களப்புப் பகுதியிலே ஓரளவு பிரபல்யமான இடம் எனக் கருதப்படும் சிறு பட்டினம்தான் களுவாஞ்சிக்குடி. மட்டக்களப்பிலிருந்து தெற்குப் புறமாகச் சுமார் பதினாறு கல் தொலைவில் இது இருக்கின்றது.

இத்தகையஇடத்திலிருந்து பிரயாணஞ்செய்ய எவ்வளவு நேரம் தேவைப்படுமென்பதை அறுதியிட்டுக் கூறமுடியாது: அதுதான் இன்றைய வஸ்சேவையின் இலட்சணம்.

மீண்டும் மன அமைதியின்றி அங்குமிங்குமாக நடந்து கொண்டிருக்கின்றேன்: என் மனதிலே ஒரு கொந்தளிப்பு உருண்டு பிரண்டு கொண்டிருக்கின்றது.

போனமாதந்தான் எனது காரியாலயத்துக்கு வந்த கெட் கிளாக்கருடன் நான் சண்டை போட்டேன்.

'அட! இந்த மக்குகளுக்கு இதுகூடவா எழுதத் தெரியாது?' என அலுத்துக் கொண்டார் கெட் கிளாக்கர் கிருஷ்ணமூர்த்தி.

எல்லோரும் எல்லாவற்றையும் அறிந்துதான் பிறக்கின்றார்களா? சந்தர்ப்ப, சூழ்நிலையிற்றான் அவை அறியப்பட்டு உணரப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றன: அதற்குள் அவருக்கு ஒரே அவசரந்தான்.

ஆமாம். என்னைப் பொறுத்தவரையிலே நான் படித்ததற்குக் குறைவில்லை. பீ. ஏ. வரை படித்துவிட்டு இரண்டு வருடங்களாக உத்தியோகத்துக்காகத் தவங்கிடந்தேன்; அதுக்குள்ளே நான் பட்ட பாட்டுக்கே அளவில்லை;

எந்த முற்பிறப்பில் செய்த புண்ணியமோ என்னவோ எனக்குத் தெரியாது. எதிர் பாராதவிதமாக இந்தக் கிளரிக்கலில் பாஸ் பண்ணிவிட்டேன்,

பாஸ் பண்ணிவிட்டால் மட்டும் போதும்; உத்தியோகம் தானாகவந்துவிடுமென்று தான் நான் எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் எனக்குப் பின் பாஸ் பண்ணிய அத்தனை பேரும் வேலை பார்க்கத் தொடங்கி விட்டார்கள்; எனக்குமட்டும் வேலை கிடைக்காதது ஒரே ஆச்சரியமாக இருந்தது. ஒரு எம். பி.யைப் பிடித்துக் கொண்டு கொழும்புக்காரியாலயத்துக்குச் சென்று விஷயத்தை முடித்துத் திரும்புவதற்குள்ளேயே ஆறு மாதங்கள் கடந்து விட்டன.

அதற்கு ஒரே ஒரு நன்மைதான் எனக்குக் கிடைத்தது. அதுதான் ஊரின் அயலேயுள்ள மட்டக்களப்புப் பட்டினத்தின் மத்தியிலே காட்சியளிக்கும் கல்விக் கந்தோரிலே வேலை கிடைத்தது.

இந்த இலட்சணத்திலே நான் மூன்று மாதங்கள் கூடக் கடக்க முடியாமலிருக்கும் போதுதான் கெட் கிளாக்கர் கிருஷ்ணமூர்த்தி என்மீது சீறி விழுந்தார்.

என்னைப் பொறுத்தவரையிலே ஏதோ கூடப் படித்துவிட்டது உண்மைதான். இருந்தாலும் பெரியமனிதன் என்பதற்காக எவ்வளவோ பொறுத்துத்தான் வந்தேன். அத்தோடு மூத்த மனிதர் என்ற அபிப்பிராயமும் இருக்கத்தான் செய்தது.

இந்த அபிப்பிராயங்கள் கூட நாளடைவில் அவரின் செயல்களினால் அறவே அழிந்தொழிந்து போய்விட்டன.

ஒரு மனிதனின் செயலினாற்றான் அவனைச் சமூகத்தில் உயர்ந்தவனாகவும், தாழ்ந்தவனாகவும் மதிக்க வழிபிறக்கின்றன. அந்த வகையிற்றான் அவரின் செயலும் என்னை அவரிடமிருந்த மதிப்பைப் படிப்படியாக அகற்றி விட்டது.

(2)

அன்றொருநாள் ஒரு பத்திரத்தை நிரப்பும் பொழுது ஒரு சிறு பிழை விட்டுவிட்டேன். அதுகூட எனக்கு முதல் அனுபவந்தான். அப்படியிருந்தும் அவரிடம் நான் கேட்ட பேச்சுக்கே அளவில்லை;

எனக்கு என்ன கோபமில்லையா? நான் இருபத்திநான்கு வயது கூடத் தாண்டாத இளைஞன்தானே! இந்நிலையில் எனக்குக் கோபம் வந்தால் அதை அடக்குவது வெகு சிரமமான காரியம்: அத்தகைய பேர்வழி நான்: இருந்தாலும் ஏதோ அவருடன் முட்டிக்கொள்ள என் மனம் அவ்வளவு விரும்பவில்லை.

'என்ன சீ. சீ. நீங்க இப்படியெல்லாம் பேசிறியள் நான் வந்து மூன்று மாதங்கள் கூடக் கழியவில்லையே! அதுக்குள்ளே......' எனக் கூறிக்கொண்டு எனது கோபத்தை ஒருவாறு சமாளித்துக் கொண்டேன்.

அவருக்கு வந்த கோபத்துக்கோ அளவில்லை. எனினும் ஒருவித அசட்டுச் சிரிப்புடன் அமைதியானார்.

ஏதோ பெரிய படுகுழியிலிருந்து விடுபட்டவனைப் போல நானும் எனது இருப்பிடத்தில் மீண்டும் உட்கார்ந்து கொண்டேன்.

'உம்மைத்தான். இனி நீர் வலு கவனமாக வேலைகளைச் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் என்னாற் செய்யக் கூடியதையெல்லாம் செய்யத் தவறமாட்டேன்' என மிரட்டல் மொழியில் மீண்டும் கூறினார் கெட்கிளாக்கர்.

'மனிதன் தப்பும் தவறும் செய்வது இயல்புதானே. அதைத் திருத்தி நடத்தத் தெரியாமல் அவர்கள் மீது சீறி விழுவதுதான் நிருவாகிகளின் வேலை போலும்' என எனக்குள்ளே எண்ணிக் கொண்டேன்.

அடுத்த பத்திரத்தை எடுத்தவர் 'உந்த மாட்டுக்குவேறு என்ன செய்யத்தான் தெரியுமோ?' என மீண்டும் கடுகடுத்தார்.

எனக்கு உச்சிமுதல் உள்ளங்கால் வரையும் ஏதோ விறைப்பு ஊடுருவிப் பாய்ந்தது. செய்வதென்னவென்றறியாத திகைப்பு மறுபுறம். இத்தனைக்கும் மத்தி[illegible] எதுவுமே பேசாமல் அமைதியானேன்;

'இதுகளைவிட எருமைமாட்டைக்கூட வைத்திருந்தாலும் இந்த ஒழுங்காக வேலை செய்யும்' கெட் கிளாக்கர் தொடர்ந்தும் கனன்றார்.

'மனிதன் நேருக்கு நேர் நின்று ஏசித் தண்டிக்கும் பொழுது ஏதோ உணர்ச்சி வசப்படுவது உண்மைதான்: ஆனால் உபயோகிக்கும் வார்த்தையிலாவது மரியாதை இல்லையே' எனப் பொறுமையை இழந்தவனாக நான் கூறினேன்.

'அட! நீதானா உந்த வேலை செய்தது. ஒழுங்காகவாவது செய்து தொலைத்திருக்கக் கூடாதா? எனக் கடுகடுத்தார் கெட் கிளாக்கர்.

'ஏன் சீ சீ இப்படியெல்லாம் வாய்க்கு வந்த கோபத்தை ஒருவாறு சமாளித்துக்கொண்டு கூறினேன்;

'போதும் உமது விமர்சனம். வேலைசெய்யாவிட்டாலும் பரவாயில்லை. சோத்துமாடு மாதிரி இருந்தாற் போதும்' என மீண்டும் கனன்றார்.

எனக்கு மேலும்படபடப்பு அதிகரிக்கத் தொடங்கிவிட்டது. ஏதோ இனமறியாத விறைப்பு என் உள்ளத்திற் சுடர்விட என்னையறியாமலே நான் உட்கார்ந்திருந்த கதிரையைத் தூக்கிவிட்டேன்.

பக்கத்திலிருந்த சக உத்தியோகஸ்தர்கள் என்னை அத்திசையிற் செல்லாமற் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

நான் அமைநிலை இழந்தவனாகப் படபடத்த உள்ளத்தோடு நின்றுகொண்டிருந்தேன்.

'அட! வேலையுஞ் செய்யாமல் வீம்பு பண்ணுவதற்கு உவர் வீடென்றெண்ணிவிட்டாரே' என மீண்டும் கடுகடுத்தார் கெட் கிளாக்கர்.

'உம்மிடம் நல்லவார்த்தையை வரவழைக்கக் கதிரை மட்டும் போதாது: காலிலுள்ள செருப்புந் தேவைதான்' எனப்பதிலடி கொடுத்துவிட்டு உட்கார்ந்து விட்டேன்;

அதற்குப்பின் அவருக்கும், எனக்கும் எதுவித பேச்சுமில்லை. நான் எனது வேலையுங் கையுமாக இருப்பேன்; அதுபோல அவரும் அவர் பாடுமாக இருப்பார்.

இருந்தாலும் எங்கள் இருவருக்கும் இடையிலே நடைபெறும் அலுவல்களுக்கும், வேறு தொடர்புகளுக்கும் காரியாலயச் சிப்பந்தி உதவியாக இருந்தான்: அதனால் இருவரும் எதுவித குறைவுமின்றி எங்கள் கடமைகளைச் சரிவரச் செய்யக்கூடியதாக இருந்தது.

ஆனால் அவரைப்பொறுத்தவரையிலே என் மீது ஒரு கண் இருந்தது. நான்தானே தூர இடத்திலிருந்து வரும் ஒரே ஒரு உத்தியோகத்தன்: அந்த வகையிலே அவர் ஒரு தந்திரத்தைக் கையாண்டார்.

காலை 8 மணியானதும் காரியாலய வரவு இடாப்பிலே சிவத்த மையினாற் கோடிட்டுவிடுவார். இதனால் நான் சிலசமயங்களில் பாதிக்கப்பட்டதுண்டு.

நான் மட்டுந்தான் பாதிக்கப்பட்டேன் என்றால் அதுகூட இல்லை; மட்டக்களப்புப் பட்டினத்திலே குடியிருக்கும் சக உத்தியோகஸ்தர்கள் அனைவரும் என்னைவிடக் கூடியளவு பாதிக்கப்பட்டார்கள்.

இந்த வகையிலே காரியா[illegible]டையே ஒருவித மனக்கசப்பு கெட் கிளாக்கரின் மேலே பாய்ந்தது.

ஏன் கெட் கிளாக்கர்கூடச் சில சமயங்களிற் பிந்திவிடுவதுமுண்டு. இதைக்கூடச் சக உத்தியோகத்தர்கள் விட்டுவிடுவதில்லை. எப்பொழுது கெட் கிளாக்கர் வரவில்லையோ அன்று இலவுகாத்த கிளிபோலத் தவங்கிடந்து குறிப்பிட்ட நேரம் வந்ததும் சிவத்தமையினாற் பதம் பார்த்துவிடுவார்கள். இதனாற் கெட் கிளாக்கர் கூடச் சங்கடப்படவேண்டிய சூழல் ஏற்பட்டது.

எப்பொழுதும் வேலையில் ஒரு ஒழுங்கு இருக்கத்தானே வேண்டும். நேரத்துக்கு வருவதும், வேலைசெய்வதும் அவரவர் மன இஷ்டப்படி இருப்பின் அங்கு கட்டுப்பாடோ, கடமையுணர்ச்சியோ, இருக்கமாட்டாது. இதைப் பல தடவைகளில் நான் உணர்ந்திருக்கின்றேன். இந்த வகையிலே இவரின் செயல் என்னைத் தண்டிப்பதாக இருந்தாலும் எனக்குப் பிழையானதாகத் தோன்றவில்லை.

ஆனால் கடமையுணர்ச்சியோடும், கண்ணியத்தோடும் வேலைசெய்யுமிடங்களிலே ஏதோ தான்தோன்றித்தனத்துக்காக கட்டுப்பாட்டைப் போட்டால் அது தவிடுபொடியாகிவிடும்.

எமது காரியாலய ஊழியர்கள்கடமையுணர்ச்சியோகட்டுப்பாட்டுணர்ச்சியோ உடையவர்கள் எனக்கூற முடியாது. இல்லாவிடில் காரியாலய அலுவல்களை ஒழுங்காக நடத்துவதற்குப் பதிலாக ஒருவர்மீது ஒருவர் கண்காணிக்கும் கடமையைத் தொடங்கியிருக்க மாட்டார்கள்.

அப்படியிருந்தாலும் பரவாயில்லை; ஒருவரை ஒருவர் வீழ்த்தி வெற்றிகாணும் படலத்திலும் சிலர் இறங்கத் தலைப்பட்டுவிட்டார்கள்; இதனாற் காரியாலயத்திலும் ஒருவித குளறுபடி தொடரத் தொடங்கியது.

இந்நிலையிலே நான் மட்டும் ஒரு செயலை மேற்கொண்டேன். வழக்கமாகக் காலை 6 மணிக்குத்தான் நான் படுக்கையைவிட்டு எழுவது வழக்கம். ஆனாற் காரியாலய நிலைமையை உணர்ந்ததும் காலை 4 மணிக்கே எழும்புவதற்கான முயற்சியில் ஈடுபட்டேன். இது ஆரம்பத்தில் மிகவும் சிரமமாகத்தான் இருந்தது. பின் பழக்கப்பட்டதும் ஒருவாறு இலகுவாயிற்று.

எப்படிக் கஷ்டப்பட்டுப் பழகினாலும் பரவாயில்லை; நேரத்துக்குப் பஸ் கூடக் கிடைக்கமாட்டேன் என்கிறதே. இதனாற் சில சமயங்களில் காலை ஏழு முப்பதைத் தாண்டியதும் ஒரு தந்தியை அடித்துவிட்டு வீட்டோடே இருந்துவிடுவதுமுண்டு.

இந்த நிலைதான் இன்றும் என எண்ணிக்கொண்டு வீட்டுக்குப் போவதற்குமுன் இறுதிமுறையாக பாதையிற் கண்களைத் துளாவினேன்.

வளைந்து நெளிந்த பாதையினூடே பஸ் வரும் அறிகுறி தென்பட்டது. உடனே உற்று நோக்கினேன், இரண்டு பஸ்கள் ஒன்றை ஒன்று முந்திக்கொண்டே வந்து கொண்டிருந்தன. ஆமாம் எங்கள் பஸ் சேவையின் இலட்சியமும் அதுதானே!

இதனிடையில் நீ முந்தி, நான் முந்தி என அடிபட்டும், இடிபட்டுங்கொண்டு சக பிரயாணிகள் பஸ்ஸில் ஏறுவதற்காகக் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தார்கள். சற்று நேரத்திலே இரு பஸ்களும் நிரம்பி வழிந்துகொண்டிருந்தன. எனக்குப் பழக்கமான ஒரு கண்டக்டர் இருந்ததால் நானும் ஒரு காலில் தொத்திக்கொண்டேன்;

பஸ்சும் வேண்டா வெறுப்பாகக் கரும்புகையைக் கக்கிக்கொண்டு முன்னேறியது; ஏதோ கடவுள் செய்த புண்ணியத்தால் காரியாலயத்தை அடையும்பொழுது 8 மணிக்கு இரண்டே இரண்டு நிமிடங்கள்தான் இருந்தன;

அங்கே காரியாலயத்தில் வேலை செய்வதற்குப் பதிலாக எல்லோரும் அங்குமிங்குமாக நடந்துகொண்டிருந்தார்கள். ஆமாம்; கெட் கிளாக்கர் லீவென்றால் ஆபீசில் எப்பொழுதும் அப்படித்தான். அந்த நிலையிலே நானும் எனது கதிரையிலே உட்கார்ந்து கொண்டேன்;

அன்று எனக்கு நிரம்பிய வேலையிருந்ததனால் மற்றவர்களைப் பற்றியும், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றியும் கவனிக்கவில்லை;

இடையிடையே சக ஊழியர்கள் குசுகுசுப்பதும் 'கொல்' எனச் சேர்ந்து சிரிப்பதும் எனதுவேலையைத் தொடரமுடியாமற் செய்தன.

அப்பொழுது மனத்திலேற்பட்ட விரக்தியோடு அவர்களை உற்று நோக்கினேன். அவர்கள் ஹெட்கிளாக்கரின் பொறுப்பில் இருந்த சில தஸ்தாவேசுகளைப் பரிசோதிப்பதும், அடிக்கடி என்னைப் பார்ப்பதுமாக இருந்தார்கள். எனக்கு அவர்களின் மீது ஏனோ ஒருவித சந்தேகம் ஏற்பட்டது.

உடனே வேலையை நிறுத்திவிட்டு அவர்கள் என்ன செய்கின்றார்கள் என்பதை அறிவதற்காக அவர்களினருகே சென்றேன்;

எங்களில் மூத்த கிளாக்கர் ஒருவர் இருந்தார். அவர் தான் ஹெட்கிளர்க்கர் இல்லாத சமயங்களில் ஹெட்கிளாக்கராகக்கடமையாற்றுவார். அப்படிப்பட்ட பொறுப்புள்ள அந்த மனிதர் தான் தஸ்தாவேசுகளைக் கிளறிக் கொண்டிருந்தார். மற்றவர்கள் அவரைச் சுற்றி வளைத்துக் கொண்டிருந்தார்கள்.

நான் ஏதோ தேடுதல் நடத்துகின்றார்கள் என எண்ணிக்கொண்டு ''என்னண்ணே செய்கின்றீர்கள்'' எனக்கேள்வியைப் போட்டு என்பக்கம் அவர்களைத் திருப்பினேன்.

''சும்மா... நம்ம ஹெட் கிளாக்கரைப் பற்றித்தான்' எனக் குரல்கொடுத்தார் மூத்த கிளாக்கர்.

'அவரைப்பற்றியா? என்ன தேடுதல்' என ஆச்சரியத்தோடு தொடர்ந்தேன் நான்.

''அவர்தானே பெரியவராச்சே அவரைப் பற்றி ஏதாவது கிடைக்குமா எனப் பார்க்கிறோம்' என்றார் கிளாக்கர்.

எனக்கு ஒரே வியப்பு ஆமாம்; இந்தக் கொடூரக் கும்பலுக்கு எங்கே மனசிருக்கின்றது. இல்லாவிட்டால் அந்தக் ஹெட்கிளாக்கருக்குச் சீட்டைக் கிழிக்க இவர்களுக்கு இவ்வளவு துணிவு வருமா?

'ஏன் அண்ணே! அவரில்லாமல் அவருடைய பைல்களைத் துளாவுவான். அவர்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நல்லூர் தொகுதி நாடாளுமன்ற

## உறுப்பினரே! சிந்தித்து செயல்படுங்கள்!

இலங்கை ஒரு குடியரசு நாடாகப் பிரகடனப்படுத்தப்படும் நாள், ஈழம் வாழ் தமிழ்பேசும் இனத்தின் துக்க நாள். புதிய அரசியல் சாசனம் ஈழம்வாழ் தமிழ் மக்களின் அடிமைச் சாசனம். புதிய அரசியல் திட்டத்தின் மூலம் இலங்கையில் வாழ்கின்ற அத்தனை தமிழ்பேசும் மக்களும் மொழியுரிமை, குடியுரிமை, மத உரிமை, மற்றும் சகல உரிமைகளும் மறுக்கப்பட்டு நிரந்தர அடிமைகள் ஆக்கப்பட இருக்கிறார்கள்.

தமிழ் மக்களின் இவ் அடிமைச் சாசனம் தயாரிப்பதற்கு இதுவரையும் ஒத்துழைப்பு நல்கி, எமக்கு எஞ்சியிருந்த சிலபல உரிமைகளையும் சட்ட மூலம் தடுப்பதற்கு முன்னின்று செயல்புரிந்த, அரசியல் நிர்ணயசபையில் வீற்றிருக்கின்ற தமிழ்பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களே, குறிப்பாக நல்லூர் தொகுதி உறுப்பினர் அவர்களே! உங்கள் தொகுதியின் ஓர் வாக்காளன் என்றமுறையிலும், தன்மான உணர்வு கொண்ட ஓர் இளைஞன் என்ற முறையிலும், என்னைப் போன்ற இளைஞர்களின் இதயப் பிரதிபலிப்பாகவும் தங்களிடம் தயவாகவேண்டுகிறேன்; உடனே அ.நி. சபையில் இருந்து வெளியேறுங்கள்; உடனடியாக ஆளும் கட்சிக்கு ஆலவட்டம் பிடிப்பதை நிறுத்துங்கள்.

ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களை முற்றுமுழுதாக அடிமையாக்கும் புதிய அரசியல் திட்டம் என்கின்ற, எம் இனத்தின் அடிமைச்சாசனத்தில் கையொப்பம் இட்டுவிடாதீர்கள். ஈழம் வாழ் தமிழ் பேசும் மக்களின் சார்பாக லட்சோபலட்சம் இளைஞர்களின் சார்பாக, மிக மிக மன்றாட்டமாக தங்களிடம் வேண்டிக்கொள்கிறேன். நீங்கள் மட்டுமல்ல, உங்கள் சகாக்களையும் எம் இனத்தின் அடிமைச் சாசனத்தில் கையொப்பமிட விட்டுவிடாதீர்கள்.

இதுவரையும் நீங்களும், உங்கள் சகாக்களும் அறிந்தோ, அறியாமலோ தமிழ் இனத்திற்குச் செய்த தவறுகளுக்கு பிராயச்சித்தம் தேடும் முகமாக உடனே மேற்கூறியவற்றை செய்யுங்கள். இவ்வாறு நீங்கள் செய்வதன்மூலம், உங்கள் மானம் மட்டுமல்ல, நல்லூர் தொகுதியின் மரியாதைமட்டுமல்ல, தமிழ்பேசும் மக்கள் அத்தனைபேருடைய தன்மானத்தையும், சுதந்திர உணர்வையும் காப்பாற்றிய பெருமை உங்களைச் சேரும். இப்படிச்செய்வதன் மூலம் நீங்கள் இழந்துவிட்ட செல்வாக்கின் ஒரு பகுதியை மீட்கவும் முயலலாம்.

மாறாக புதிய அரசியல் சாசனம் என்கின்ற தமிழ் மக்களின் அடிமைச் சாசனத்தில் கையொப்பம் இட்டு, உங்களை மட்டுமல்லாது, எங்களை மட்டுமல்லாது, எங்கள் இனத்தையும் நிரந்தர அடிமையாக்க முற்பட்டால், தமிழினத்தின் விடுதலை வரலாற்றில் அழியாத வடுவை அடைவீர்கள்.

—'நல்லை அருள்'

---

# 'நாம் யார்க்கும் குடியல்லோம்'

## நாவுக்கரசரின் இக்குரலே தமிழன் குரல்

'ஆண்டுதோறும் வரும் சிவராத்திரியை நாம் அனைவரும் கொண்டாட வேண்டும் என்பது சொல்லாமலே விளங்கும். ஆனால் இவ்வாண்டு வந்துள்ள சிவராத்திரி செந்தமிழைப் பொறுத்தவரை மிகமுக்கியத்துவம் வாய்ந்த விழாவாக விளங்குகிறது.'

### அட்டன் சிவராத்திரி விழாவில் ஈழவேந்தன் உரை!

"சிவராத்திரி விழா தொடர்ந்தும் சிறப்புடன் விளங்க சிவநெறி வாழவேண்டும். சிவநெறி வாழ செந்தமிழ் வாழ வேண்டும். செந்தமிழ்தான் சிவனின் பெருமை பேசும் தேனும் மூவர் தேவாரமும், தித்திக்கும் திருவாசகமும், அருள் ஊறும் திருமூலர் திருமந்திரமும் மற்றும் அருட்பனுவல்கள் பலவும் உண்டு. ஆகவே செந்தமிழ் அழிகின்றபோது இவையும் அழிகின்றன.

எனவே செந்தமிழ் வாழ வேண்டின் செந்தமிழ் பேசும் மக்கள் வாழவேண்டும் செந்தமிழ் மக்கள் அந்தரத்தில் வாழ முடியாது. அவர்களுக்கென்று ஒரு தாயகம் வாழ்வகம் வேண்டும்—இன்ற இவ் வாழ்வகத்திற்கே பெரும் பேர் இன்னல்கள்—ஆபத்துக்கள் ஏற்பட்டுள்ளன.

முனிசுவரத்தை இழந்துள்ள நாம் இனிக் கோணேசுவரத்தையும் கேதீசுவரத்தையும் இழந்து விடுவோமோ என்று அஞ்சவேண்டிய நிலை ஏற்படுகிறது.

ஆகவே இவை அனைத்தையும் நிலையான முறையில் காக்க எமக்கு ஒரு அரசியல் அமைப்பு—உருவாகியே தீர வேண்டும்.

'எம்மை எதிர்நோக்கும் பிரச்சினையில் இருந்து யாம் ஒளித்தோடி சமயத்துள் தனியே சரண்புகுந்து நாம் சமயவாதிகள் என்று கூறுவதிலே பொருள் இல்லை. இது ஒளித்தோடுகின்ற கோழைகளின்—Escapists போக்கு.

'உண்மைச் சமயப் பெருமகனாகிய நாவுக்கரசர் தன் அரசனையே எதிர்த்து 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் என்று முழங்கினார். நம் மணிவாசகரும் 'யாமார்க்கும் குடியல்லோம் என்றுதான் கூறினார்.

'இச் சிவராத்திரியன்று எம் சிவனை சிந்தைநெகிழ வழிபடின் 'இக்கற்றவர்க்கு தெய்வம்துணை' என்ற கூற்றிற்கு அமைய தெய்வம் எமக்கு வேண்டிய உள்ளத் தூய்மையையும் — துணிவையும் செயற்றிறனையும்—இறுதியில் உலகமே வியக்கும் வெற்றியை ஈட்டித் தரும் [illegible]

---

## திருடன் பிடிபட்டான்!

தினபதியார் இன்று தன்னை ஒரு பெரிய எழுத்தாளர் என்று கருதிக்கொண்டிருக்கிறார் அல்லவா? சில வேளைகளில் ஈழத்தின் 'கல்கி' என்றும் தினபதியார் தன்னை நினைத்துக்கொள்வதுண்டு—பாவம் இதோ சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு தினபதியார் செய்த திருட்டு ஒன்று இப்போது அம்பலமாகியிருக்கிறது!

அப்போது மட்டக்களப்பில் இருந்த இளைஞர்கள் சிலரைச் சேர்த்து தினபதியார் 'பர்வத ஜோதி' என்று ஓர் நாடகத்தை எழுதி—தயாரித்து இருந்தாராம். நாடகத்தில் மணிமணியான வசனங்கள் அமைந்திருந்தனவாம். அந்த நாடகக் குழுவைச் சேர்ந்த ஒருவர் இப்போது பள்ளிக்கூட ஆசிரியராக இருக்கிறார். அவர் தரும் தகவலே இது:-

''பர்வத ஜோதி'' நாடகத்தில் நடித்தவன் நான். அந்த நேரத்தில் தினபதியார் எழுதிய வசனத்தை உச்சரித்தவன் நான். அருமையான அந்த வசனங்களை எழுதியவர் தினபதியார் என நினைத்து அப்போது அவரில் பெரிய மதிப்பு வைத்திருந்தேன். நான் மட்டுமல்ல—அந்த நாடகத்தில் நடித்த எல்லோருமே அவரை மகா எழுத்தாளர் - 'பிறவி எழுத்தாளர்' என்றே எண்ணினோம்—ஆனால் நாடகம் நடைபெற்று பல மாதங்களுக்குப் பின்பு—ஒரு நாள் புத்தகக் கடைக்குச் சென்று நான் சில புத்தகங்களை வாங்க நேரிட்டது. அதில் ஒரு புத்தகம் தமிழ்நாட்டு அறிஞர் வ. ரா அவர்கள் எழுதிய ஒரு நூலாகும். அந்நூலைப் படித்தபோது நான் திடீரென்று அதிர்ந்துபோனேன்... நான் நாடகத்தில்பேசிய ஒவ்வொரு வசனமும் அப்படியே வ.ரா.வின் புத்தகத்தில் இருந்தது. இது என்ன அநியாயம் என்று நினைத்து நான் நாடக நடிகர்கள் பலரிடமும் அப்புத்தகத்தைக் காட்டினேன்: அனைவருக்கும் அப்போதுதான் திருட்டு எழுத்தாளரின் தில்லுமுல்லு தெளிவாயிற்று.''

இதுதான் 'பர்வதஜோதி' நடிகர் ஒருவர் இன்று நமக்குப் பச்சைத் திருடர் தினபதியார் பற்றித் தரும் தகவலாகும்,

தமிழகத்தில் இருந்து பத்திரிகைகள் புத்தகங்கள் இறக்குமதியாகக் கூடாது என்ற கருத்துடையவரல்லவா தினபதியார். அவ்வாறு புத்தகங்கள் அங்கிருந்து இறக்குமதியாகாவிட்டால் தான் மட்டும் சில புத்தகங்களை களவாக வரவைத்து—அவற்றிலிருந்து கருத்துக்களவு செய்து—இங்குள்ளவர்களுக்குத் தெரியாமல்—கௌரவம் பெறலாம் என்பதுதான் நோக்கமோ என்னவோ. யார் கண்டார்கள்?

---

# அரசியல் சாசனத்தில் ஒப்பமிடாதீர்கள்!

## வட்டுக்கோட்டை நா. உ. விடம் வாக்காளர் வேண்டுகோள்!

களபூமி, காரைநகரைச் சேர்ந்த திரு. மு. பாலசிங்கம் என்னும் அன்பர் பின்வரும் கடிதமொன்றை பதிவுத தபால் மூலம் வட்டுக்கோட்டை நா. உ. திரு. ஆ. தியாகராசாவுக்கு அனுப்பியுள்ளார்:—

குண்டங்கரை களபூமி<br>
காரைநகர்<br>
9-2-1972

உயர்திரு வட்டுக்கோட்டை பாராளுமன்ற உறுப்பினர் அவர்கட்கு!

ஐயா,

நான் தங்கள் தொகுதியில் ஒரு வாக்காளனாய் இருக்கின்றேன் இருந்தும் நான் தங்கட்கு வாக்களிக்காவிடினும் தாங்கள் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்பதை மறுக்கவோ, மறைக்கவோ முடியாது.

நான் 1956-ம் ஆண்டு முதல் அகில இலங்கை தமிழரசுக் கட்சியை ஆதரித்து வரும் நோக்கம் யாதெனில் தன்னிகரற்ற தலைவராம் தந்தை செல்வநாயகம் அவர்கள் தமிழ் மக்களின் விடுதலைக்காகவும், தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், அயராது உழைத்து வருவதனாலும் இலங்கை வாழ் தமிழ் மக்களின் (சாதி மதபேதமின்றி) மொழி, இனம் பிரதேசம், கலாச்சாரம் ஆகியன வற்றைப் பேணிப் பாதுகாத்து வரும் ஒரே கட்சி அகில இலங்கை தமிழரசுக் கட்சி என்பதனாலுமே தலைவர் செல்வநாயகம் அவர்களையும், அவர் வளர்த்த கட்சியையும் ஆதரித்து வருகின்றேனே அன்றி எனது தனிப்பட்ட நன்மைக்காகவோ அல்லது வேறெந்த நலன் கருதியோ தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்கள் பாராளுமன்றம் செல்ல வேண்டுமென்ற அவாவினாலோ, நான் அவர்களை ஆதரிக்கவுமில்லை. வாக்களிக்கவுமில்லை.

தாங்கள் தற்பொழுது எமது தொகுதியின் பிரதிநிதியாய் இருக்கின்ற படியால் தங்களிடம் எனது தாழ்மையான விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்க விரும்புகின்றேன்.

அதாவது:— தற்பொழுது பிரகடனம் செய்யப்படவிருக்கும் ''ஸ்ரீலங்கா குடியரசு'' அரசியல் சாசனத்தில் எங்கள் மொழி, இனம், பிரதேசம், கலாச்சாரம் ஆகியனவற்றை நாம் அடையக் கூடியதாக இல்லை;

எமது சுதந்திரத்தைப் பாதுகாக்க உதவிய 29-வது சரத்து நீக்கப்பட்டுள்ளது! அடிமைத் தளை இறுக்கப்பட்டுள்ளது.

தனிச் சிங்களச் சட்டம் வலுப்படுத்தப் பெறுகின்றது.

தமிழ் சிறுமைப் படுத்தப் படுகின்றது.

சிங்களம் நீதிமன்றமொழியாகின்றது.

தமிழர்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாக ஆக்கப் படுகின்றார்கள்;

நாடற்றோர் எனப்படுவோர் சந்தேகப் பிரஜைகளாக ஆக்கப்பட்டுள்ளார்கள்.

குடியுரிமைச்சட்டம் அநீதியான முறையில் பயன் படுத்தப்பட்டுள்ளது.

18-வது விதியில் 1-வது பிரிவில் வழங்கப்படும் உரிமை 2-வது பிரிவில் மறுக்கப்பட்டுள்ளது. சாதி ஒழிப்புக்குச் சரியான வழி வகுக்கப்படவில்லை.

இவைகளின் வாயிலாக எமது மொழி, இனம் கலாச்சாரம், ஆகியன முற்றாகப் பறிக்கப்படுவதை நாம் உணரக் கூடியதாயிருக்கின்றது.

1961-ம் ஆண்டு நடைபெற்ற உரிமைப் போராட்ட சத்தியாக்கிரகத்தில் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முன்னை நாள் உதவி சபாநாயகர் உடுப்பிட்டி திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் முன்னணியில் நின்று போராடினார். அதே போன்று வவுனியா முன்னைநாள் பா. உ. திரு. தா. சிவசிதம்பரம் அவர்களும் உற்சாகத்துடன் அதில் ஈடுபட்டிருந்தார்; அவர்களைப்போல் தாங்களும் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளாவிடினும், மேற்கூறப்பட்ட தமிழ் இனத்திற்கு ஏற்படவிருக்கும் இன்னல்கள், இடையூறுகள் அவர்களை அடக்கி ஒடுக்கி நசுக்கப்படுகின்ற ஆபத்து ஏற்படுகின்ற இந்த நேரத்திலாவது அந்தப் பேராபத்திலிருந்து தமிழ் மக்களை விடுவிக்கத் தாங்களும் ஏனைய தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து அரசியல் சாசனத்தில் கொண்டு வரப்படும் சட்டங்கட்கு வாக்களிக்கவோ ஒப்பமிடவோ வேண்டாமென்று தமிழன்னையின் மீதும், தமிழ் நாட்டின் மீதும் ஆணையிட்டுத் தங்களை வேண்டிக் கொள்கின்றேன்;

இப்படிக்கு<br>
மு. பாலசிங்கம்.

'எனினும் தெய்வத்திலேயே முழுப்பழியைப் போட்டு யாம் சோம்பியிடவாது முயற்சி செய்யவேண்டும். 'God helps only those who help themselves' என்ற கூற்றினை யாம் மறத்தல்கூடாது.

'இதுவே இன்றைய என் சிவராத்திரிச் செய்திகளாக செந்தமிழ்மக்களுக்குவழங்கி விடைபெறுகிறேன். வாய்ப்பினைத் தந்தவர்க்கும் வந்து இருந்து கேட்டவர்களுக்கும் நன்றி வணக்கம்.

---

அருள் விருந்து

''அன்பு ஆட்சிபுரிவது போன்று ஆயுதம் ஆட்சிபுரியாது''

தர்மசக்கரம்.

மில்க்வைற் தயாரிப்புகள் தரத்தில் சிறந்தவை. இன்றே வாங்கிப் பாவியுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

த. பெ. இல. 77, — யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமியரும் இந்துக்களும் கிறித்தவர்களும் மதத்தால் வேறுபடினும் இனத்தால் தமிழரே!

## இக்பால் போன்ற இளைஞர்கள் இஸ்லாமியர் மத்தியில் தோன்ற வேண்டும்!

13-2-72 சுதந்திரனின் "இஸ்லாமிய தமிழர் இயக்கம்" என்ற பகுதியில் மன்னார், உப்புகுளத்தை சேர்ந்தவை: எம்: இக்பால் என்ற தமிழன்பரின் உணர்ச்சி மிக்க கடிதம் கண்டு பெருமகிழ்வெய்திய தமிழர்களில் நானும் ஒருவன்.

சகோதரர் இக்பால் இன உணர்வின் முக்கியதுவத்தை மிக சிறப்பான ஆதாரங்களுடன் விளக்கியிருக்கிறார்; கிழக்கு பாகிஸ்தானிலுள்ள இஸ்லாமிய மதத்தை சேர்ந்தவங்காளிகளை மேற்கு பாகிஸ்தானிய ராணுவக் கும்பல் கொன்றுகுவித்ததே அப்போது மதம் எங்கே போனது? சொந்த மதத்தை சேர்ந்த வங்காளத்தாய்க்குலத்தை கற்பழித்து மானபங்கம் படுத்தியதே அப்போது மதம் எங்குபோனது; அந்த பரிதாபகரமான நிலையில் கிழக்கு பாகிஸ்தானிய வங்காளிகளுக்காக குரல் கொடுத்தவர்கள் அதே இனத்தைசேர்ந்த இந்திய வங்காளிகளும், புண்ணிய பூமியாம் இந்தியாவும், உலகெங்கிலுமுள்ள இரக்க குணமுள்ள மக்களுமே: மதம் மதத்தை அழித்த போது இனம் இனத்துக்காக அழுதது. இத்தகைய நிலையில் போராடிய வங்கதேச மக்கள் இன்று வங்காள தேசமென்ற தனி நாட்டை உருவாக்கி பெருமையுடன் வாழ்கிறார்கள்.

சில இஸ்லாம் மதத்தை சேர்ந்த தமிழர்கள் மத்தியில் ஒரு தவறான அபிப்பிராயம் நிலவுகிறது. இஸ்லாமிய பரம்பரை அரபியர்களும், சிங்களப் பெண்களினதும் கலப்பால் உருவானது என்பதே அது: இலங்கை முஸ்லிம்களில் யாருமே சிங்களத்தை தாய் மொழியாக கொண்டதில்லை.

சிங்களம் தெரியாத முஸ்லிம்கள் இருக்கலாம் ஆனால் தமிழ் தெரியாத முஸ்லிம்கள் இருக்கமுடியாது. இஸ்லாமியர்களில் பலர் இன்று சிங்களத்தை பேசலாம் ஆனால் அவர்களின் வீடுகளில் தமிழே ஆட்சி செய்யும் அழகினை காணலாம்: காலி என்ற இடத்தில் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். இங்கு பெரும்பான்மை மக்கள் சிங்களவர்கள். இந்து தமிழர்களோ, கிறிஸ்தவ தமிழர்களோ சிற்சிலர் இப்போது தான் வியாபார நிமித்தமாக அங்கு வாழ்கிறார்கள்; ஆனால் அங்கு பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வரும் முஸ்லிம்கள் தமிழையே பேசி வருகிறார்கள்; அவர்கள் அரபியர்களினதும் சிங்களவர்களினதும் வழித்தோன்றலாய் இருந்ததால் நிச்சயம் சிங்களத்தையே தாய்மொழியாக கொண்டு இருப்பார்கள். ஆனால் தமிழ் பற்று இருந்து இஸ்லாமியர் தமிழர்கள் தங்கள் தாய் மொழியாம் தமிழை மறக்கவில்லை. அதைக் கட்டிக்காத்தார்கள்; பேணி வளர்த்தார்கள்;

கொழும்பு செட்டி என அழைக்கப்படும் தமிழினத்தை சேர்ந்த ஒரு பிரிவினரின் ஒரு சிறு பகுதி சிங்களவர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த இடத்தில் வாழ்ந்ததால் சிங்களவர்களைப்போல் வாழ்கிறார்கள். தங்களை ஒரு தனி இனமாகவும் அழைத்துக் கொள்கிறார்கள்; சிங்களத்தையே தாய்மொழியாக கொண்டு இருக்கின்றார்கள். ஆனால் அதே நேரத்தில் பெரும்பான்மையான சிங்கள மக்களோடு வாழ்ந்த போதிலும் இஸ்லாமிய தமிழர்கள் தங்கள் தாய் மொழியை மறக்கவில்லை. அரசியல் ஆதாயத்துக்காக இஸ்லாமிய தலைவர்கள் என்று தங்களை சொல்லிக் கொள்பவர்கள், இஸ்லாமிய தமிழ் பெருங்குடி மக்களை ஏமாற்றப் பார்க்கலாம்.

இலங்கை முஸ்லிம்களின் மூதாதையர் அரபியரும் சிங்களவரும் என்று கூறி இஸ்லாமிய தமிழர்களை திசைதிருப்ப நினைக்கலாம்; இந்த போலி தலைவர்களின் பேச்சுக்கு பாமரர்களும் தலையசைக்கலாம்; ஆனால் சகோதரர் இக்பால் போன்ற பகுத்தறியும் ஆற்றல் படைத்த இஸ்லாமிய தமிழர்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை அவரின் கடிதமூலம் அறிந்தேன் மனம் பூரித்தேன்.

நான் கத்தோலிக்க கிறிஸ்தவன். ஆனால் தமிழினத்தை சேர்ந்தவன். சகோதரர் இக்பால் இஸ்லாமியர். ஆனால் தமிழ் இனத்தை சேர்ந்தவர். இனம்தான் முக்கியம், மதம் அல்ல. சில சுயநல வாதிகள் இஸ்லாமிய ஒருமைப்பாடு என்ற முறையில் இனமற்ற இஸ்லாமியர்களை உருவாக்க பார்க்கிறார்கள். ஆனால் அது சாத்தியமாக போவதில்லை. அரபிய முஸ்லிம் அரபியன்தான்; மலேசியா முஸ்லிம் மலேசியன்தான். தமிழ் முஸ்லிம் தமிழன்தான். இஸ்லாமிய மதத்துக்கு ஊறுநேர்ந்தால் இஸ்லாம் மதத்தை சேர்ந்தவர்கள் என்ற பொது நோக்கில் ஒன்றுசேரலாம் கிறிஸ்தவர்களும் ஒன்றுசேரலாம்; ஆனால் இன சமத்துவமிக்க ஒரு நாட்டில் மத சகிப்பு தன்மை இயற்கையாக நிலவும்; ஏனெனில் மதத்தை விட இனமே முக்கியம்.

இன ஒழிப்பு சதி நடைபெறும்போது இந்து முஸ்லிம், கிறிஸ்தவ மதத்தை சேர்ந்த தமிழர் அனைவரும் ஒன்றுசேரவேண்டும். தாங்கள் இஸ்லாமிய இனம் என்ற தனி இனம் கருதிக்கொண்டு இருக்கும் சில இஸ்லாமிய தமிழர்களிடையே விழிப்புணர்சியை ஏற்படுத்த, நாம் தமிழர் என்ற இன உணர்வை உருவாக்க, தமிழ் உணர்ச்சி மிக்க இஸ்லாமிய வாலிபர்கள் முன்வரவேண்டும். இயக்கம் நடத்த வேண்டும்; பட்டி தொட்டிகளுக்கெல்லாம் சென்று இன உணர்வை பரப்பவேண்டும். கிறிஸ்தவ தமிழர்களைப்போல் தங்கள் மதபெயர்களோடு தமிழ் பெயரையும் சேர்த்துக் கொள்ள ஆர்வத்தோடு முயல வேண்டும்;

கத்தோலிக்கனாக இருந்தாலும் இஸ்லாத்தில் பற்றுக் கொண்டவன் நான். இஸ்லாமிய தமிழ் வாலிபர்களை அன்போடு அழைக்கின்றேன். இன உணர்ச்சியோடு வெளியே வாருங்கள். இப்படிபட்ட முயற்சிக்கு இயக்கங்களை உருவாக்குங்கள். வெவ்வேறு மதங்களைசேர்ந்த தமிழின மக்களாகிய நாங்கள் உங்களுக்கு ஒத்துழைப்பை தருகின்றோம். வாழ்த்துகிறோம். இன ஒருமைப்பாட்டுக்காக ஒன்று சேர்ந்து உழைப்போம்;

இஸ்லாமிய தமிழர்களே! நீங்கள் 'தமிழ் பேசும் மக்களல்ல' ஆனால் தமிழர்களே. இப்பொழுது இஸ்லாமிய தமிழர்களுக்கும் மற்ற தமிழர்களுக்கும் இடையே தமிழ் பேசும் மக்கள் என்ற வார்த்தையை கொண்டு சிண்டு முடித்துவிட பார்க்கிறார் திருவாளர் தினபதியார்; இன்னும் சிறிது காலம் போனால் இந்து தமிழர்களிடையேயும், கிறிஸ்தவ தமிழர்களிடையேயும் கூட சிண்டு முடித்துவிட பார்ப்பார்; ஆனால் உணர்ச்சிகொண்ட தமிழினம் அவருக்கு பரிதாபகரமான ஏமாற்றத்தை கொடுக்கும்;

'வாழ்க இஸ்லாம்! வளர்க தமிழினம்!'

**ராஜ்—வி, செல்வதுரை**

## தமிழகத்திற்கு அப்பால்....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படிப் பசுபிக் பெருங்கடல் வரையிலும் தமிழர் ஒரு வகையில் பரவி இருக்கின்றனர். ஜப்பானிலும் ஒரு சில தமிழர்கள் வாழ்கின்றனர். ஆஸ்ரேலியாப் பல்கலை கழகங்களில், தமிழர் சிலர் ஆசிரியர்களாகவும், ஆராய்ச்சி மாணவர்களாகவும் பணி செய்து வருகின்றனர். இங்கெல்லாம் இந்தியப் பண்பாட்டோடு தமிழ்ப் பண்பாட்டிலும் அக்கறை காட்டும் வெளி நாட்டாரும் வாழ்கின்றனர். ஜப்பானியர் ஒருவர் பாரிஸ் தமிழ் மாநாட்டில் ஒரு பகுதிக்கு ஒருநேரம் தலைமை பூண்டார்; கொரியாவைச் சேர்ந்த மற்றொருவர் சென்னை உலகக் கருத்தரங்கில் மாநாட்டில் கலந்து கொண்டார்;

### மோரிசு—ஆப்பிரிக்கா

மேற்கே சென்றால் உரிமை பெற்று விளங்கும் மோரிசுத் தீவில் தமிழர்கள் சிறந்த இடம் பெற்றுள்ளார்கள். ஆனால், அவர்கள் தமிழை மறவாது காப்பதற்கு வேண்டிய உதவிகளை நாம் செய்தல் வேண்டும்; தென்னாப்பிரிக்காவின் கதை காந்தி அடிகள் மூலம் உலகம் அறிந்த ஒன்றாகும். காந்தியடிகளுக்கு பெரும் துணையாக இருந்தவர்கள் தமிழர்களே ஆம். (தில்லையாடி) வள்ளியம்மையை மறக்கமுடியுமா? 1924ல் காந்தியடிகள் சென்னை வந்திருந்தபோது, அவரோடு தென்னாப்பிரிக்காவில் தொண்டாற்றிய ஒருவரை சிந்தாதிரிப்பேட்டைச் சேரியில் நேரில் கண்டு அளவளாவினார்;

இன்று செல்வ நிலையில் தமிழர்கள் அங்கே உயர்ந்து நிற்கின்றனர். ஆனால், அரசியலில் 'கறுப்பர்கள்' என ஒதுக்கப்பெற்று இரண்டாந்தர குடிகளாகவே வருந்துகின்றனர். சாதிவேற்றுமை நீங்கி வாழ்வது பிறநாட்டுத் தமிழரிடம் இயல்பாகி விட்டது. பத்தர், நாயக்கர் முதலிய தலைவர்கள் தமிழகிடம் தோன்றி உள்ளது பாராட்டத்தக்கது. தமிழிலும் சைவத்திலும் பற்று ஏற்பட்டிருந்தாலும் அவற்றை வளர்க்கும் வாய்ப்போ சூழ்நிலை காரணமாகக் குறைந்தே வருகிறது. இதற்காக வாழக்கூடிய உலக நோக்குடைய தமிழர்கள் தமிழ் நாட்டிலிருந்து பண்பாட்டுத் தூதர்களாக இங்கெல்லாம் சென்று உழைக்க முன்வரவேண்டும். கிழக்காப்பிரிக்கா முதலிய இடங்களிலும் சில தமிழர்கள் இருந்தாலும் இனவேற்றுமை புயல் வீசும்போது தமிழைப் பற்றிக் கவலைப் படத்தான் வேண்டி இருக்கிறது.

### பலதேச மொழி

இப்படிப் பல நாடுகளில் வாழும் பிரிவினர்களுக்கு எல்லாம் தாய்மொழியாக விளங்குவதால் தமிழும் பலதேச மொழிகளில் ஒன்றாக ஒப்புதல் பெற்றுள்ளது. யுனெஸ்கோ நிறுவனம் வெளியிடும் 'கூரியர்' பலதேச மொழிகளில் வெளி வருவதால் தமிழிலும் வெளி வருகிறது. மேலும் அந்த யுனேஸ்கோ நிறுவனமே தமிழாராய்ச்சிக்கெனப் 'பலதேசத் தமிழ் நிறுவனம்' ஒன்றைச் சென்னையில் தொடங்குவதற்கு எல்லா நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

(அடுத்த இதழில் முடியும்)

## தொழில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

பத்தமிழ் பற்றிய உணர்ச்சிமயமான உரையும் பலரையும் கவர்ந்தன;

இறுதியாக இடம் பெற்ற கலையரங்கில் மெல்லிசை, வாத்திய நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து கல்லூரி மாணவர்களால் மேடை யேற்றப்பட்ட 'சீதனம் வேண்டாம்' என்ற சீர்திருத்த நாடகம் வாழும் தமிழினத்தின் வளரும் இளஞ் சமுதாயத்திற்கு நல்ல பலபோதனைகளை எடுத்தியம்பியது. சமுதாயத்தில் நிலவும் லஞ்சம் போன்ற ஊழல்களையும், சீதனம் போன்ற கொடுமைகளையும் கண்டிக்கும் வகையில் இந் நாடகம் அமைந்தது;

தலைநகரில் தரம் மிகுந்த ஒரு தமிழ் விழாவைத் தந்த தொழில்... நம் தமிழ் அன்பர்களின் பாராட்டுக்குரியவர்களாவர்கள்.

## அவனும்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்ததும் கேட்கிறதுதானே' எனப் பொறுமையை இழந்த வளாக மீண்டுங்கேட்டேன்.

'அவனைப்பற்றிய குறையை உங்களுக்கு அள்ளியா தருவான்? கஷ்டப்பட்டால்தானே பலன் கிடைக்கும்' எனக்கூறிய மூத்தகிளாக்கர்' அவன் சின்னப் பெடியன்; அவன் கிடக்கட்டும். உங்கள் வேலையைக் கவனியுங்கள்' என மற்ற கிளிக்கர்களிடம் கூறினார்.

''அண்ணே! நீங்க செய்வது சரியோ தப்போ எனக்குத்தெரியாது; ஆனால் ஒன்று மட்டும் சொல்லுகின்றேன் கேட்கிறீர்களா?' என்றேன்.

'என்ன அது?' என ஆச்சரியத்தோடு கேட்டார் மூத்தகிளாக்கர்.

'நாங்கள் இப்படித் துணைவும்போது யாராவது பெரிய வங்க வந்திட்டான் நமக்கு என்ன நடக்குமோ தெரியாது? சிலவேளை நமக்குத் தான் கிழிந்தாலும் கிழியும்' என்றேன்.

எல்லோரும் 'கொல்' எனச் சிரித்து விட்டார்கள். நான் இதையாவது சொல்லி அவர்களின் நடத்தையைத் திருத்தலாம் என்றுதான் நினைத்தேன்.

''அட! பொடிப்புள்ளே, முக்கியமாக விஷயமாகக் கடிதம் எழுதவேண்டியிருக்கு அதற்காகத்தான் தேடுகிறோம் என மழுப்பி விடலாம்'' என்றார் புத்தியிலும் முதிர்ந்த அந்த மூத்த கிளாக்கர்:

''அண்ணே! ஏதோ அவனும் மனிதன்தான். அவனுக்கும் புள்ளகுட்டிகள் உண்டு. ஏதோ யோசித்துச் செய்யுங்கோ' எனக் கூறிக்கொண்டு அவ்விடத்தில் நிற்க மனமின்றி எனது இடத்தில் வந்து உட்கார்ந்து கொண்டேன்;

(யாவும் கற்பனை)

நாடக விமர்சனம்:

## தமிழின விடுதலைப் பயணத்தின் தனிப்பே பல்கலைக் கழக மாணவரின் 'பயணம்'

இலங்கைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கத்தினரின் 16வது தயாரிப்பான 'பயணம்' என்ற நாடகம் பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் 19-2-72, 20-2-72 ஆகிய இரு தினங்களிலும் சிறப்பாக இடம் பெற்றது;

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் இன்றைய இன்னல்களை அவல நிலைகளை மக்களுக்கு அழகாகவும் ஆழமான கருத்துக்களுடனும் 'பயணம்' என்ற நாடகத்தின் மூலம் விளங்க வைத்துள்ள இலங்கைப் பல்கலைக் கழக தமிழ்ச் சங்கத்தினர் பாராட்டுதற்குரியவர்களே;

'பாட்டாளிகள் எங்கள் கூட்டாளிகளே' என்று கூறிக்கொண்டு இந்நாட்டில் வாழ்ந்து இந்நாட்டின் வளத்துக்காக வியர்வை சிந்தி உழைத்து உருக்குலைந்திருக்கும் ஏழைத்தொழிலாளிகளை பயணம் அனுப்பி வைக்கும் பரிதாப நிலையை எடுத்துக் காட்டும் 'பயணம்' என்ற நாடகம் உண்மையிலேயே பார்ப்போரை உணர்ச்சி வசப்பட வைத்தது.

... ... ... ... ... ... ...

### தணிக்கை

... ... ... ... ... ...

இந்நாடகத்தில் பங்கேற்று நடித்த மாணவர்கள் அனைவரும் தமது பாத்திரத்திற்கு ஏற்ப திறம்பட நடித்துள்ளார்கள். புது அனுபவம் என்று கூறுவதற்கு இடம் ஏற்படாத வகையில் முதல் அனுபவத்திலேயே திறமையுடன் நடித்த பல்கலைக் கழக மாணவர்கள் பாராட்டுதற்குரியவர்களே;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழுக்கு வரும் விபத்துக்களைப் போக்கிட வழிவகைகள் யாவை?

## பட்டினபாக்கம் முத்தமிழ் விழாவில் முதல்வர் கலைஞர் கருணாநிதி விளக்கம்

"நண்பர் நாராயணசாமி பேசுகையில், 'நாம் தமிழ்விழா நடத்துகிறோம்; சிலர் இப்போது தமிழுக்கு என்ன ஆபத்து வந்து விட்டது என்று துண்டறிக்கை வெளியிட்டிருக்கிருர்கள்; என்ன ஆபத்து வரவில்லை என்பதையெல்லாம் நான் விளக்க இருக்கிறேன் என்று குறிப்பிட்டார்;

விளக்கவே தேவையில்லை; தமிழுக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது? என்று அறிக்கை வெளியிடுகிருர்களே; அதுதான் தமிழுக்கு வந்த ஆபத்து!

தமிழை வளர்க்க வேண்டும். அதனுடைய வலிவை பொலிவை நாடு அறியச் செய்ய வேண்டும்; தமிழால் வளர்ந்தவர்கள் நாம் — தமிழால் செழித்தவர்கள் நாம் —அந்தத்தமிழை வளர்ப்பதிலும் செழிக்க வைப்பதிலும் நமக்கு நீங்காத கடமை உணர்ச்சி உண்டு என்பதற்கு எடுத்துக் காட்டாக ஆளுகிற பொறுப்பை ஏற்றுக் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களும், அவர்களுக்குப் பின் அவர் வழி நின்று அவரது பொன்னான கொள்கைகளை நிறைவேற்றச் சூளுரைத்துச் செயல்படுகின்ற நாங்களும் எங்களால் இயன்ற அளவு தமிழை தமிழகத்திலும், வேறு பிற இடங்களிலும் பரப்புவதற்கு முனைந்து முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அதற்கு ஒரு சிறு எடுத்துக் காட்டாகத்தான் பல நாட்களாக "போர்ஷோர் எஸ்டேட்" என்று அழைக்கப்பட்ட இந்தப் பகுதி பட்டினப் பாக்கம் என்ற புதிய—அல்ல—பழைய தமிழ்ப் பெயரைப் பெற்றதாகும்.

பாக்கங்கள் என்பது தமிழ் நாட்டில் பண்டை நாட்களில் மக்கள் வாழ்கிற குறிப்பிட்ட பகுதிக்கு வைக்கப்படுகிற பெயர்களாகும்.

குப்பங்கள் என்றும்—பாக்கங்கள் என்றும் அந்தநாளில் தமிழர்கள் தாங்கள் வாழுகிற இடங்களுக்குப் பெயர்களை அமைத்துக் கொண்டார்கள். பெரும் பாலும் கடற்கரை யோரங்களில் வாழுகிற தமிழ்ப் பெருங்குடி மக்கள் அப்பகுதியைப் பாக்கம் என்றே அழைத்தார்கள்;

காவிரிப்பூம் பட்டினத்தில்—மருவூர்ப் பாக்கம் என்ற அழகிய தமிழ்ச் சொல் அப்பகுதியில் கடற்கரையோரத்தில் மக்கள் வாழுகிற பகுதிக்கு இடப்பட்டிருந்ததை சிலப்பதிகாரம் மூலம் அறியலாம்.

ஆகவே கடற்கரைப் பகுதியில் இருக்கிற இந்தப்பகுதிக்குப் பட்டினப்பாக்கம் என்ற பெயரை வைப்பது சொல் பொருத்தம் என்று இந்த அரசு கருதுகிறது. பலபேர் இது புரியுமா என்று கேட்டார்கள். வாயில் நுழையுமா என்று வினு எழுப்பினுர்கள் வழக்கத்திற்கு வருமா என்ருர்கள்.

அதைப்போலவே செல்லின் இன்லியூர் ஆகியது; பாரிஸ் பாரிமுனை ஆகியது. இதெல்லாம் இன்று வழக்கத்திற்கு வந்துவிட்டது. இதுபோலவே மற்ற இடங்களின் பெயர்களையும் மாற்றிட வேண்டும் என்கிற எண்ணம் இன்றைய தினம் மக்களிடையே பரவலாக ஏற்பட்டிருப்பதைக் காண்கிறோம்.

வெள்ளையர் இந்த நாடாண்ட காலத்தில் முத்தமிழும் வளர்ச்சி பெற்றிருந்ததாக இங்கே பேசிய சி. வி. ஆர்.கூறினுர். இடைக்காலம் என்று அந்தக் காலத்தை அவர் குறிப்பிட்டார். இடைக்கால மென்பதே நாம் தமிழைக் கவனிக்காமலிருந்த காலம் தான்;

தமிழுக்குப் பொற்காலம் ஒன்றிருந்தது. அதன் பிறகு கற்காலம்—அது நாம் தமிழைக் கவனிக்காமலிருந்த காலம்; இப்போது மீண்டும் தமிழுக்குப் பொற்காலம் வந்து விட்டது;

### குழந்தையைக் கொஞ்சிட தாய்க்குச் சொல்ல வேண்டுமா?

குழந்தையைக் கோகிலமே என்று கொஞ்சு—மழலையை மாணிக்கமே என்று கொஞ்சு என்று தாயிடத்திலே சொல்லுவது எவ்வளவு நகைப்பிற்குரியதோ, அதே போன்றதுதான் தமிழனிடம் தமிழை ஓம்பு, தமிழைக் காப்பாற்று என்று கூறுவதுமாகும்.

முத்தமிழ், முக்கடல், மும்முரசு என்றெல்லாம் பழம் பெருமையை நாம் அவனிக்குச் சொல்லிச்சொல்லி விக்கு புகழ் பெற்ற நாடு நம்முடைய நாடு என்ற அந்தப் பழம் பெருமையை நாம் கொண்டிருக்கிறோம். ஆனால் பேசுவதோடு விட்டால் நம்முடைய தமிழ் வெறும் காப்பியத் தமிழாக, இலக்கியத் தமிழாக, செய்யுள் தமிழாக இந்த அளவோடு முடங்கி விட்டால் போதாது என்பதற்காகத்தான் தமிழ் பயிற்று மொழியாக வரவேண்டுமென்று நாம் கருதுகிறோம்.

தமிழில் விஞ்ஞானச் சொற்கள் வந்தாக வேண்டும். அறிவு உலகில் விரைந்து நடைபோடக் கூடிய அளவில் தமிழில் புதிய புதிய சொற்கள் வளர்ந்தாகவேண்டும்; அவைகள் கண்டு பிடிக்கப்பட்டாகவேண்டும்;

ஆங்கிலமென்ருல்—உலகத் தொடர்புக்கு — அனைத்து நாடுகளின் தொடர்புக்குத் தேவை. இதே நேரத்தில் நம்முடைய நாட்டில் நம்முடைய தாய்மொழி வளர்ந்திடல் என்பது இன்றியமையாத ஒன்று. ஆகவே தான், இன்றிருக்கின்ற ஆட்சியின் கட்சி, ஆளுகிற அரசின் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் இருமொழிக் கொள்கையை வலியுறுத்துகிறது.

நம் மாநிலத்தில் தேவையானது தமிழ். மற்ற மாநிலத்தோடு தொடர்புகொள்ளவும், பிற நாடுகளோடு தொடர்பு கொள்ளவும், அனைத்து உலகிற்குத்தேவையானது ஆங்கிலம்.

ஆகவே, இந்த இரண்டு மொழி போதும் என்கிற வலிமை மிகுந்த வாதத்தை முன்னேற்றக் கழகமும் முன்னேற்றக் கழக அரசும் இணைந்து எடுத்துச் சொல்லி வருகிறது.

சிலர் வாதிடுகிருர்கள்.

தமிழ் நாட்டுக்குத்தமிழ்—

இந்தியாவிற்கு இந்தி—

அனைத்து உலகிற்கு ஆங்கிலம் என்று வாதிடுகிருர்கள்.

வாதிடுவது சுலபம், ஏனென்ருல் வாதிடுபவர்கள் அவைகளைப் புதிதாகக் கற்றுக்கொள்ளப் போவதில்லை. அவைகளைக் கற்கப் போவது இளம் தலைமுறையினரின் தலைகளில் சுமத்தப்படுவதை நாம் மறந்துவிடக்கூடாது.



தமிழ், இந்தி, ஆங்கிலம்—இந்த மூன்றையும் இளம் குழந்தைகள் படித்திட வேண்டும். அவர்களுடைய மூளையில் திணிக்கப்பட்டாக வேண்டும் என்ற முயற்சியை நாம் மேற்கொள்ளுவோமே யானுல் யாருக்கு அதில் அதிகப் பயன் ஏற்படுகிறது என்பதை மறந்துவிடக்கூடாது.

இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இரண்டுமொழிதான் படிக்க வேண்டும்,

தமிழ்நாட்டில் இருந்து கொண்டு மொழிப் பிரச்சினையால் பதவிகளைப் பறிகொடுத்த ஒரு வயதான பெரியவர்தான் இனிமேல் படிக்கத் தேவையில்லை என்று கருதி இந்தி இந்தியாவுக்கு—தமிழ் தமிழ் நாட்டுக்கு—இங்கிலீஷ் அகில உலகத் தொடர்புக்கு என்று பேசுகிற நேரத்தில் தமிழ்நாட்டிலிருக்கிற நம் வீட்டுப் பிள்ளைகள் நம் மாநிலப் பயனுக்காகத் தமிழையும், இந்தியத் தொடர்புக்காக இந்தியையும், அகில உலகத் தொடர்புக்காக ஆங்கிலத்தையும் ஆக மூன்று மொழியைப் படிக்கவேண்டிய இக்கட்டான நிலைக்கு ஆளாகிருர்கள்.

அதே நேரத்தில் இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிருக்கிற உத்திரப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ, மத்தியப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ, பீகாரைச் சேர்ந்த ஒரு பிள்ளையோ படிக்கவேண்டியது தனது தாய்மொழியான இந்தி அடுத்தது ஆங்கிலம். இரண்டே மொழிதான். அதோடு அவர்களுடைய சுமை முடிகிறது.

நம்முடைய பிள்ளைகள் மூன்று மொழிகளைப் படித்து, இரண்டு மொழி படித்தவர்களோடு போட்டி போட வேண்டியிருக்கிறது;

தாய்மொழியான இந்தி மொழியைப் படிக்கிறவர்களோடு நாம் பிற மாநில மொழியான இந்தியைப் படித்து போட்டி போட வேண்டியிருக்கிறது;

இதைச்சொன்னுல், அனைத்துலகத்திற்கு ஆங்கிலம் இருப்பதைப்போல — தமிழ் நாட்டிற்குத் தமிழ் இருப்பதைப் போல — பிற மாநிலங்களோடு தொடர்பு கொள்ள இந்தி வேண்டாமா என்று கேட்கிருர்கள்;

### விஞ்ஞானியும் பூனையும்

ஒரு வேடிக்கையான கதை ஒரு பெரிய விஞ்ஞானியின் வீட்டில் நடைபெற்றதாகச் சொல்லுவார்கள்;

அந்த மகத்தான விஞ்ஞானி ஒரு அழகான பூனை வளர்த்தான்; அது உள்ளே வந்து போவதற்காகச் சுவரில் ஒரு பெரிய ஓட்டையைச் செய்தான்; அந்தப் பூனையும் அதன்வழியே வந்து போய்க்கொண்டிருந்தது; சில நாளில் அந்தப் பூனை ஒரு குட்டிபோட்டது;

அந்தப் பெரிய விஞ்ஞானி, பெரிய துவாரத்தினருகே இன்னொரு சிறிய ஓட்டையைப் போட்டான்; இது எதற்காக என்ருர்கள் அவனுடைய நண்பர்கள்;

குட்டி வந்துபோவதற்காக என்ருன் அந்த விஞ்ஞானி.

பூனைக்காக உள்ள பெரிய ஓட்டையிலே குட்டியும்வந்து போக முடியாதா என்று அவர்கள் கேட்ட பிறகுதான் ஆகா, இந்த யோசனை நமக்கில்லாமல்போயிற்றே என்று நினைத்தானும் அந்த விஞ்ஞானி!

அதைப்போல அகில உலகத் தொடர்புக்கு ஆங்கிலம் பொது மொழி என்ருல், தொடர்பு மொழி என்ருல் பக்கத்திலிருக்கிற மாநிலங்களோடு தொடர்புகொள்ளவும் அந்த ஆங்கிலம் போதுமா, போதாதா?

பூனை போகிற அந்த துவாரத்தில் குட்டியும் போகுமா போகாதா? இதுதான்இன்று நாம் எழுப்புகிற வாதம்;

# தமிழினத்தைக் கூறுபோட முயல்வோருக்கு

## தந்தை செல்வா கொடுத்த செம்மையான அடி!

இலங்கைத் தமிழரசுக் கட்சியினரின் வருங்காலத் தலைவர் தெரிவு சம்பந்தமான செய்திகளைப் பற்றி வெவ்வேறு கோணங்களில் வைத்துச் சித்தரித்துக் கொக்கரிக்கும் தினபதி ஏட்டிற்கும், தெளிவிலா உள்ளம் கொண்ட சிந்தனையாளர்க்கும் தலைவர் தெரிவுசம்பந்தமான தனது கருத்தினை தந்தை செல்வா அவர்கள் தந்துள்ளார் 13.2.1972... சுதந்திரன் வாயிலாக.

அன்று அயோத்தியின் இராமனின் பட்டாபிசேக விழா நடக்கவிருக்கும் சந்தர்ப்பத்தில், கைகேயியைக் கருவியாகப் பாவித்து இராமனைக் காடேகவைத்து, சக்ரவர்த்தி தசரதரையும் எமன் உலகிற்கேகச்செய்து இன்புற்ருளே கூனி, அந்த நவீன கூனியே எமது தினபதியார்.

ஈற்றில் எந்தப் பரதனுக்காக இத்தனையும் செய்வித்தாளோ அதே பரதனுல் புறக்கணிக்கப்பட்டு மேலும் ஒருபடி கூனிக்கொண்ட கூனியைப்போல் தினபதியாரும் தனது பத்திரிகையைத்தனை கொண்டு செய்யும் சூட்சியின் முடிவும் ஆகிவிடும் என்பதை விரைவில் காணலாம்.

அவர் எதிர்பார்த்தபடி, சக்ரவர்த்தி தசரதரைப் போன்று தந்தை செல்வா மூச்சுத்திணருதிு, தள்ளாத வயதில் [illegible] இருப்பது இலைபதியாருக்கு மேலும் [illegible] இல்லாம்.

வடக்கு வாடிவிடும், கிழக்கு கிழிந்துவிடும், எனக் கீச்சிடும் விபரமறியாக் குஞ்சுகளுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது தந்தையின் அறிக்கை.

திரு: அமிர்தலிங்கத்தை எடுத்துக்கொண்டாலும் சரி, திரு. இராசதுரையை எடுத்துக்கொண்டாலும் சரி, எமது தந்தையைப் பொறுத்தவரை இருவரும் ஒருவரே, அதாவது... இரு புறமும் வெவ்வேறு சின்னங்களைக் கொண்ட ஒரே நாணயம் போன்று.

இன்று நல்லெண்ணம், படைத்த பொதுமக்களும் இவ் இரு வேட்பாளர்களில் எவர் பெரியவர், எவர் சிறியவர், எனும் பேதம் காட்டும் நிலையிலில்லை. அவர்கள் எதிர்பார்ப்பது இத்தீவில் இன்று அல்லல்படும் தமிழ்பேசும் இனத்தின் தொல்லை போக்கத் துணிவும், தூய உள்ளமும்கொண்ட, துடிப்புமிகு வீரத்தலைவன் ஒருவனே அன்றி திரு: இராசதுரையையோ திரு: அமிர்தலிங்கத்தையோ எதிர்பார்க்கவில்லை.

தமிழ் இனத்துக்கும் இவ்விரு வேட்பாளர்களினது சேவையும் தேவை தான் ஆனுல் இருவாள்களை எப்படி ஒரு உறையில் சொருகமுடியும்?

ஆனுல் சொருகுப்படாத 'வாள்' கூர்மையற்றது எனக் கூறிக்கொள்ளுவதற்கில்லை,

அன்று அயோத்தியில் இராமனும் பரதனும் வெவ்வேறு தாயின் வயிற்றில் பிறந்திருந்தும் கருத்தில் எவ்வளவு ஒற்றுமையுடன் காணப்பட்டனர். காரணம் இருவரும் ஒரே தந்தையின் புத்திரர்கள் அல்லவா?

அவ்விதமே வேட்பாளர்கள் இருவரும், வெவ்வேறு மாகாணத்தைச் சார்ந்தவர்களாக விருந்தபோதும் தந்தை செல்வா அவர்களின் ஒரே கொள்கையில் விளைந்த முத்துக்கள் அல்லவா?

'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்ற தாரக மந்திரத்தில் ஊறிய அவர்களை, இலேசில் கூறுபோடமுடியாது என்பதை கனவுலகில் சஞ்சரிப்போர் உணரும்நாள் வெகு தொலைவிலில்லை. எனவே கபடநாடக கூனித் தினபதியார் மேலும் ஒருபடி கூனிக்கொள்ள ஏற்றவாறு புதிய தலைவர் தெரிவு நடந்தேறப் பிரார்த்திப்போமாக;

உறங்கட்டும் பொருமை! உயரட்டும் தமிழர் வாழ்வு!! ஓங்கட்டும் இணைப்பாட்சி;

—மு. தணிகாசலம்.

செங்கலடி;

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தபாலகத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சிலோன் தியேட்டர்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது

# செல்லமகால் - ஈரோஸ்

கிங்ஸ் (பதுளை) — நெல்சன் (திருமலை) — இம்பீரியல் (மட்டு நகர்) — வின்சர் (யாழ் நகர்)

லீலா, ஆனந்தன், ஜெயகாந்த், பேரம்பலம், சாந்தி, இந்திராதேவி, —நடித்த—

வி. எஸ். டீ. பிலிம்ஸ் அளிக்கும்

# குத்து விளக்கு

இசை ஆர். முத்துசாமி | மூலக் கதை - தயாரிப்பு வி. எஸ். துரைராஜா | ஒளிப்பதிவு — டைரக்‌ஷன் டபிள்யூ. எஸ். மகேந்திரன்

---

சிலோன் என்டடெயின்ஸ்மென்ட்ஸ்சாரின் திரைகளில் காட்சியளிக்கின்றது



## 9வது வெற்றி மாதம்

# சென்ட்ரல் (மருதானை) ராணி (யாழ்நகர்)

நடிகர் திலகத்தின் 150வது வெற்றிச் சித்திரம்

சிவாஜி, ஜெயலலிதா, நாகேஷ், நம்பியார்
விஜயகுமாரி, முத்துராமன், டி.கே.பகவதி
வி. எஸ். ராகவன் நடிக்கும்

# சவாலே சமாளி
(ஈஸ்ட்மன் கலர்)

---

## இரண்டாவது ஜனத்திரள் வாரம்

கெப்பிட்டல் (கொழும்பு) — பிளாசா (வெள்ளவத்தை) — கிங்ஸ்லி (கொழும்பு) — சபையர் (வெள்ளவத்தை) — வெலிங்டன் (யாழ்நகர்) — லிடோ (யாழ்நகர்)

எம். ஜி. ஆர். - பத்மினி

அசோகன் சுந்தரராஜன் மஞ்சுளா

சோ தேங்காய்சீனிவாசன்

— நடித்த —

சத்தியா மூவிஸ்

# ரிக்‌ஷாக்காரன்

(ஈஸ்மன் கலர்)



இசை: எம். எஸ். விஸ்வநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்க வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1972-ம் வருடம் பெப்ரவரி மாதம் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது —ஆசிரியர் கோவை மகேசன்